பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ. 1/-

பெண்மைக்குமெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ தை மீ 1 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 13 (14 01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 42

# அரச மிரட்டலை எதிர்கொள்ள பிரபா இங்கே!

## சென்னையில் இருந்து தகவல்

சென்னை ஜன 14

இலங்கை அரசு வடபகுதிக்கு விடுத்துள்ள இராணுவ மிரட்டலை எதிர் கொள்ளும் பொறுப்பை ஏற்கவே தமிழீழ விடுதலைப் புலிகள் தளபதி திரு. வே. பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்று இருக்கிறார்.

இப்படி சென்னையில் வெளியான 'இந்து' ஆங்கில நாளிதழ் முன்பக்கச் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

வடக்கு முழுவதையும் இழப்பதற்கு முன்னர் ஏற்கனவே இழந்த பகுதிகளை மீட்டெடுக்க இலங்கை அரசு முழுமூச்சுடன் முயற்சித்து வருகின்றது–

இது குறித்து எரிபொருள் தடை போன்ற மிரட்டல் நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது —

இந்த மிரட்டல் நடவடிக்கைகளை எதிர்த்து போராடும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவே திரு. பிரபாகரன் யாழ்ப்பாணம் சென்று இருக்கிறார் —

வடபகுதி நிலைமை ஸ்திரமாகும்வரை திரு. பிரபாகரன் அங்கு தங்கி இருக்கக்கூடும் —என்றும் நேற்றைய (செவ்வாய்) 'இந்து' இதழில் செய்தி வெளியாகி உள்ளது.

(அ-ஐ-எ)

## வடக்கில் விமானமும் தயாரிக்கப்படுகிறது

### இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி

கொழும்பு, ஜன. 14

வடபகுதியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதத் தொழிற்சாலையில் விமானமும் தயாரிக்கப்படுவதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இது சம்பந்தமான படங்களையும் அப் பத்திரிகை வெளியிட்டு உள்ளது.

இப்பத்திரிகையின் விசேட செய்தியாளர் திரு அனந்தகிருஷ்ணன் அண்மையில் யாழ்நகர் விஜயம் செய்திருந்தார். அதன்பின்னர் அவர் இந்தியா சென்று இவ் விவரங்களை தனது பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றார்.

இந்தியன் எக்ஸ்பிரஸில் பிரசுரமான படங்களை, கொழும்பில் உள்ள சுயாதீன பத்திரிகா சமாஜ தமிழ், சிங்கள, ஆங்கில நாளிதழ்கள் நேற்று வெளியிட்டன.

(இ-ஐ-எ)

## சத்திரச் சந்தி கடைகள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் சத்திரத்துச் சந்தியில் உள்ள பல கடைகள் முன்பாக 'கடைகள் இடம் மாற்றம்' என்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

அடிக்கடிவிழும் ஷெல் குண்டுகள் காரணமாக இப்பகுதியில் பல கடைகள் சேதமடைந்துள்ளன.

இதன் காரணமாகவே கடைகள் இப்பகுதியிலிருந்து இடம் மாற்றப்படுகின்றன. (இ-10)

## ரோந்து இல்லையாம்

கொழும்பு, ஜன 14

தைப்பொங்கல் தினத்தன்று ஆயுதப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் இருக்காது என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(அ-எ)

## இந்தியக் கவலைக்கு இலங்கை ஆட்சேபம்

கொழும்பு, ஜன. 14

அமெரிக்கக் கூலிப் படையினர் இலங்கை அரசுப் படையினருக்கு உதவுவது குறித்து இந்தியா அமெரிக்காவிடம் கவலை தெரிவித்த சம்பவத்துக்கு இலங்கை ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

பிரதி வெளிநாட்டமைச்சர் திரு. டிரோன் பெர்ணண்டோ, இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றை நேற்று வெளிநாட்டமைச்சுக்கு அழைத்து ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டார்.

திரு. டிக்ஸிற்றிடம் கையளிக்கப்பட்ட ஆட்சேபக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இலங்கையின் மதிப்புக்கு ஊறு விளைவிப்பதாகவும் அவமரியாதை ஏற்படுத்துவதாகவும் திரு. வெங்கடேஸ்வரனின் கூற்று அமைந்துள்ளது.

எந்த நாட்டுடன்

(8ஆம்பக்கம் பார்க்க)

## தமிழர் ஆசிரியர் சங்கம் பொங்கல்செய்தி

யாழ்ப்பாணம், ஜன. 14

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. இந்த நன்னாளில் சிலநம்பிக்கை தரும் உறுதிப்பிரதிக்ஞைகளை நாம் எடுத்து செயல்படுத்த தீவிரமாக முயற்சிப்பது எதிர்காலத்தில் பெரும் பயன் தருவதாக அமையும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் பொங்கல் தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ)

முச்சந்தி முனி



உங்கள் [எல்லோருக்கும் என்னை] பொங்கல வாழ்த்துக்கள்!

---

வாசகர்கள், விளம்பரதாரர்கள்; செய்தியாளர்கள்; அபிமானிகள் அனைவருக்கும் உதயனின் பொங்கல் வாழ்த்துக்கள் உரியனவாகுக.



வானத்தில் ஹெலி சுற்றுகிறது. அரணைப் போராளிகள் சுட்டு வீழ்த்தி விடாமல் பாதுகாப்பதற்காக குண்டு வீச்சு விமானங்கள் காவல் ரோந்து புரிகின்றன.

போராளிகளின் காவல் அரண்களைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு ஹெலி சரமாரியாகச் சுடுகிறது. அதன் விளைவுகள்......! அனர்த்தங்கள்......!

இது தமிழ் மண்ணில் நாளாந்தக் காட்சி. அதனால் தனது விளைநிலங்களில் பயிர் செய்ய முடியவில்லையே என்று தவிக்கிறான் தமிழ் உழவன். போதாக்குறைக்கு எரிபொருள் தடை அவன் உழைப்புக்கே உலை வைத்து விட்டது. இந்த நிலையில் உலை மூட்டி, பானை வைத்துப் பால் பொங்கித் தைப்பொங்கல் கொண்டாட முடியுமா என்று ஏங்குகிறான் அந்த உழவன், பார்த்தீர்களா?

ஆனால்—

ஆண்டு ஆண்டாக, நிலமகளைச் சிரிக்க வைத்து விளை நிலத்தைக் கொழிக்க வைத்து, தமக்கும் ஊர்மக்களுக்கும் சோறு அளித்த உதயனை உழவனின் பனிவி மறக்கவில்லை. பூமியின் ஆதாரநாயகனாக விளங்கும் உதயனுக்கு மிக அடக்கமான முறையில் தன் பிள்ளைகளுடன் சேர்ந்து பொங்கலிட்டு நன்றி செலுத்துகிறான். அவன் இனியாவது இந்த அநியாயங்கள் ஒழிந்து பூமித்தாய் பூர்த்து முகம் மலர்ந்து, அருள் புரிவாயாக என்று இறைஞ்சுகிறான்.

கைவண்ணம்: வி. கே. கருத்துவண்ணம்: உதயதாசன்

# 1981-ல் இருந்து 15,217 தமிழர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 14

1981 ஜனவரியில் இருந்து 1986 டிசம்பர் வரை ஆயுதப் படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு 15,217 தமிழர் உயிரிழந்தனர்.

யாழ் பிரசைகள் குழுக்களின் இணைப்புக் கமிட்டிச் செயலாளர் மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

1981இல் இருந்து ஆண்டு வாரியாக ஆயுத படையினரின் நடவடிக்கைகளினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் இணைப்புக் கமிட்டிச் செயலாளர் வெளியிட்டிருக்கிறார்.

அந்த விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1981 --- | 846 |
| 1982 --- | 1,380 |
| 1983 — | 3 678 |
| 1984 --- | 3,301 |
| 1985 --- | 2,695 |
| 1986 — | 2,805 |
| மொத்தம் -- | 14.705 |

தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஒக்ஸிஜின் தட்டுப்பாட்டால் 400 பேர் உயிரிழந்தனர்.

1985இல் 191 பேரும் 1986இல் 209 பேரும் இப்படி உயிரிழந்தனர்.

அதிர்ச்சி மற்றும் காரணங்களினால் 1985, 1986ஆம் ஆண்டுகளில் 112 பேர் உயிரிழந்தனர். 1985இல் 63 பேரும் 1986 இல் 49 பேரும் உயிரிழந்தனர்.

இப்படி இணைப்புக் கமிட்டிச் செயலாளர் தனது அறிக்கையில் கூறியிருக்கிறார். (இ-எ)

### சுபநேரம்

14—01—1987
புதன்கிழமை
சுபநேரம்:
5. 04 முதல் 6. 34 வரை
ராகுகாலம்:
12. 34 முதல் 2.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பூரணை விரதம்
தைப்பொங்கல்
தமிழர் திருநாள்

## போராளி வீரமரணம்

யாழ்–பண்ணை மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் தங்கியிருக்கும் சிப்பாய்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக தமிழ் ஈழ இராணுவத்தைச்சேர்ந்தகுணசிங்கம் தயாளன் (மன்னாகம்) வீரமரணமடைந்தார்.

பண்ணை மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் தங்கியிருக்கும் சிப்பாய்கள் நேற்று கொட்டடிப் பக்கமாக உள்ள சில வீடுகளைத் தீ வைத்துக் கொளுத்தியபடி வெளியேற முற்பட்ட போதே தமிழ் ஈழ இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இதை எதிர்த்து சிப்பாய்கள் நடத்திய தாக்குதலிலேயே மேற்படி போராளி மரணமடைந்தார்.

இதேவேளைசிப்பாய்கள் நேற்று கோழிக் கடைப் பக்கமாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

---

குடாநாட்டில்

# உணவு நிலை: கரைகிறது

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணக் குடாநாட்டின் உணவுப் பொருள் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. பிறமாவட்டங்களில் இருந்து வரும் உணவுப் பொருள்கள் குறைந்துவிட்டன. எரிபொருள் தடையே அதற்குக் காரணமாகும். கையிருப்பும் கரைந்துகொண்டு போகிறது. இவ்வாறு யாழ் வர்த்தகர் வட்டாரங்களில் இருந்து உதயனுக்கு அறிய வந்தது.

யாழ் குடாநாட்டில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் ஆபாய நிலை உருவாகிவருகிறது.

யாழ் மாவட்டத்துக்கான உப உணவுப்பொருள்கள் பெரும்பாலும் பிறமாவட்டங்களில் இருந்து லொறிகள் மூலமே கொண்டுவரப்படுகின்றன.

அரசு விதித்த எரிபொருள் தடை காரணமாகவும் ஆனையிறவு இராணுவ முகாமில் ஏற்படும் பலத்த சோதனைகள் காரணமாகவும் பல போக்குவரத்து நிறுவனங்கள் தமது லொறிச் சேவைகளை நிறுத்தியுள்ளன.

நேற்றுக்கூட உப உணவுப் பொருள்களுடன் வந்த ஏராளமான லொறிகள் ஆனையிறவு தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டன.

இதன்காரணமாக பல உப உணவுப் பொருள்களுக்கு குடா நாட்டில் தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

கையிருப்பில் இருந்த பல முக்கிய உணவுப் பொருள்களும் குறைந்து வருகின்றன என்று வர்த்தகர் சங்கப் பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தகவல் தந்தார். (அ-10)

### ★ வாசகர் கவனத்துக்கு

இன்று தைப்பொங்கல். உதயன் அலுவலகப் பணியாளர்களுக்கு விடுமுறை அதனால் நாளை மட்டும் உங்கள் அபிமான உதயனை நீங்கள் வாசிக்க இயலாது.

16- 1- 1987 வெள்ளிக்கிழமை யன்று, 'உதயன்' வழமை போல் உங்கள் கைகளில் தவழ்வான்.

—பிரதம ஆசிரியர்

# லொறிமீது சூடு! ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 14

லொறியில் சென்றோர் மீது நேற்று யாழ். தொலைத் தொடர்பு திணைக்களத்தில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

ஒருவர் காயம் அடைந்தார். ஏனையோர் காயமெதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

நேற்று பகல் இரண்டு மணி அளவில் கொட்டடியில் இருந்து யாழ்நகர் நோக்கி வந்த லொறி மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

காயமடைந்தவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## உதயம் பல்பொருள் அங்காடி

யாழ்ப்பாணம், ஜன. 14

உதயம் பல் பொருள் அங்காடி திறப்பு விழா இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இடம் பெறுகிறது. காலை 8-30 மணியிலிருந்து இரவு 8-00 மணிவரை உதயம் பல்பொருள் அங்காடி இயங்கும். (இ)

## பொங்கல் அமர்க்களம் குறைவு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ் நகரில் பொங்கல் அமர்க்களம் நேற்று சோபை இழந்து காணப் பட்டது.

வில்லியம் ஹாவே
ஞாபகார்த்த
மருத்துவமனை
William Harvey
Memorial Hospital
— இன்று ஆரம்பமாகின்றது —
எல்லாவகையான மருத்துவ ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைகளுக்கும் நாடவேண்டிய இடம்:
வில்லியம் ஹாவே
ஞாபகார்த்த மருத்துவமனை
17, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பால் இனிப்பான வெல்லத்துடன் சேர்ந்து பொங்கி சர்க்கரைப் பொங்கலாக ஆவது போல, நம்முடைய வாழ்க்கையிலும் தூய்மையான எண்ணங்களுடன் இனிப்பான சிந்தனைகள் வளர்ந்து பொங்கி ஆனந்தமான வாழ்க்கை அடைய முயற்சி செய்வோம்.

– ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

உதயன்

இல. 18, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 14-01-1987 த.பெ இல 28

## பொங்கலில் ஒரு புனராலோசனை

பொங்கலோ! பொங்கல்!

இன்று தைப்பொங்கல்.

தமிழ் உழவர்களின் திருநாள் உழவர்கள் மட்டுமன்றி எல்லாத் தமிழர்களுமே கொண்டாடும் தமிழர் பண்டிகை.

வாழ்வின் ஆதாரம் உணவு அந்த உணவை உற்பத்தி செய்ய உழவனுக்கு உதவுபவன் உதயன் உதயனின் உதவி இல்லையேல் உழவன் உணவு உற்பத்தி செய்ய முடியாது உழவன் உழைக்கவில்லை எனில் உணவு இல்லை உணவு இல்லையேல் உலகம் இல்லை என்றாகி விடும்.

அதன் காரணமாக உதயனுக்கு நன்றி தெரிவிக்க, அவன் அருளை மேலும் வேண்டி அவனுக்குப் பொங்கிப் படைத்து, வணங்கி நன்றி தெரிவிக்கும் அடிப்படையில் உருவானதே பொங்கற் கொண்டாட்டம்.

உதயனுக்கு மட்டுமன்றி உணவை உற்பத்தி செய்யத் தன்னோடு சேர்ந்து உழைத்த கால்நடைக்கும் நன்றி பாராட்டப் பட்டிப் பொங்கலை உருவாக்கினான் தமிழ் உழவன்

பொங்கலும் பட்டிப் பொங்கலும் தமிழர்களின் நன்றி மறவாத பண்புக்கு அணிகலன் போன்ற கொண்டாட்டங்கள். அதனால் அவை தமிழ் மக்களின் முக்கிய பண்டிகைகளாக விளங்குகின்றன.

பொங்கற் பண்டிகையை முழு மனதோடு, உள்ளப் பூரிப்போடு, பூரண விருப்பத்தோடு கொண்டாடும் நிலையில் ஈழத் தமிழர்கள் இன்று இல்லை.

அரசியல், பொருளாதார சுதந்திரங்கள் இல்லாத நிலையில்—

பல சோதனைகளும், வேதனைகளும் மலிந்த நிலையில்—

அன்றட வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்க முடியாத நிலையில்— எவ்வாறு உள்ளக் களிப்புடன் பொங்கல் கொண்டாட முடியும்?

எந்த வருடத்திலும் இல்லாதது போல, இவ்வருடம் பொங்கல் எரிபொருள் தடைக்கு மத்தியில் வந்திருக்கிறது

எரிபொருளுக்கும் எமது இப்போதைய விவசாயத்துக்கும்— உணவு உற்பத்திக்கும் நிறைய சம்பந்தம் உண்டு

எனவே பொங்கல் தினத்தில் எமது உணவு உற்பத்தி குறித்து சிறிதேனும் சிந்திப்பது பொருத்தமாகும்.

எமது விவசாய நடைமுறைகள் முழுக்க முழுக்க நவீனமயமானவை அல்ல. முழுக்க முழுக்கப் பழமையானவையும் அல்ல. இரண்டும் கலந்த 'சாம்பார்' முறையே கைக்கொள்ளப்படுகிறது.

நவீன விஞ்ஞான முறைகளைக் கையாளுவதற்கு ஏற்ற தொழில் நுட்ப வசதியும், மூல வள வசதியும் எம்மிடம் இல்லை அவற்றைச் சரிவரக் கையாண்டு பயன் பெறுவதற்கு முழுக்க முழுக்க வெளிநாடுகளையே நம்பி இருக்க வேண்டும்.

எமது பிரதேசத்து பழைய விவசாய முறைகள் அரைகுறையாகவே பயன் படுத்தப் படுகின்றன. அவற்றை முழுமையாகக் கைக்கொள்ள வேண்டிய காலகட்டம் இப்போது வந்துள்ளது.

பழைய உற்பத்தி முறைகளைக் கையாண்டு இப்போதைய சனத்தொகைக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தியாக்கி சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா என்பது பென்னம் பெரிய கேள்விக்குறியாகும்.

எமது மண்ணில் அதிகம் விளையக்கூடிய உணவுப்பயிர்களை உற்பத்தி செய்வதையும், இயன்றவரையும் வெறுமனே கிடக்கும் நிலத்தைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துவதையும் அடிப்படையாகக்கொண்ட அவசரகால– யுத்தகால உணவு உற்பத்தித் திட்டம் ஒன்று உடனடியாகத் தேவை.

அதுமட்டுமன்றி எங்கள் மண்ணில் விளையக்கூடிய உணவுப் பொருள்களையே எமது பிரதான உணவுகளாக மாற்றும் அளவுக்கு எமது உணவுப் பழக்கங்களைப் புதுப்பித்துக் கொள்வது மிகப் பிரதானம்,

உணவு உற்பத்தியோடு நெருங்கிய உறவுள்ள பொங்கல் திருநாளில் புதிய மாற்றங்களுக்கு எங்களைத் தயார் செய்து கொள்ள உறுதி பூணுவோமாக.

## பொங்கல் பொருள்கள் கடையிலிருந்து மாயம்

மானிப்பாய், ஜன. 14

தைப்பொங்கலுக்காக விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப் பட்ட பல உணவுப் பொருள்கள் மானிப்பாய் உடுவில் வீதியில் உள்ள கடையிலிருந்து கடந்த இரவு களவாடப்பட்டன.

மானிப்பாய் – உடுவில் வீதியில் உள்ள ஸ்ரீகணேசன் ஸ்ரோர்ஸ் என்ற கடையிலேயே கடந்த இரவு கள்வர்கள் புகுந்து பொருள்களை களவாடினர்.

தைப் பொங்கலுக்கு விற்பனை செய்வதற்காக கடந்த இரண்டு நாட்களுக்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட சீனி, சர்க்கரை, மிளகாய் மூடைகள் பலவும் கடையின் உரிமையாளர் தம் சொந்த தேவைக்காக சேமித்து வைத்திருந்த பெற்றோல் மற்றும் சில பொருள்களும் கடையின் களஞ்சியப் பகுதியிலிருந்து களவாடப்பட்டனவாம் (இ-90)

# அமெரிக்காவின் அணுகுண்டு பரிசோதனை

வாஷிங்டன், ஜன. 13

இந்த ஆண்டிற்கான முதலாவது அணு ஆயுத பரிசோதனையை நிலத்துக்கு அடியில் அண்மையில் அமெரிக்கா நடத்தியது.

இத்தகவலை நேற்று வாஷிங்டனில் வெளியிட்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தனது பெயரை வெளியிட மறுத்துவிட்டார்.

இரண்டாவது, மூன்றாவது பரிசோதனைகளை எதிர்வரும் மாதங்களில் அமெரிக்கா நடத்த இருப்பதாக அந்த அதிகாரி கருத்து வெளியிட்டார்.

அமெரிக்கா அணு ஆயுத பரிசோதனையை மீண்டும் நடத்தத் தொடங்கினால் தன்னிச்சையாகப் பிரகடனப் படுத்திய ஆயுத பரிகரணைத் திட்டத்தை விலக்கிக் கொண்டு விடப் போவதாக ரஷ்யா ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைக் குறைக்க வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் வீன்ஸ்பெர்கர் அமெரிக்க நாடாளுமன்றத்தை நேற்றுக் கேட்டுக் கொண்டார்.

ரஷ்யாவின் ஆயுத பலத்தைச் சமாளிக்க பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## இந்திய படகு பாக். கைப்பற்றியது

கராச்சி, ஜன. 13

60 இந்திய மீனவர்களுடன் 4 இழுவைப் படகுகளை பாகிஸ்தான் கைப்பற்றியது.

பாகிஸ்தான் கடற் பிராந்தியத்தில் இப்படகுகள் நின்றபோதே கைப்பற்றப் பட்டன என்று பாகிஸ்தான் செய்தி நிறுவனம் அறிவித்தது. (இ–எ)

## அக்கியூனோ அரசு ஊழல் நிறைந்தது

### முன்னாள் மந்திரி குற்றச்சாட்டு

மணிலா, ஜன 13

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்கியூனோவின் அரசாங்கம் ஊழல் நிறைந்த சர்வாதிகார அரசாகும்.

இப்படி பதவி நீக்கம் செய்யப்பட்ட பாதுகாப்பு அமைச்சர் ஜுவான் என்றிலே குற்றஞ்சாட்டினார்.

மேலும் ஆறு ஆண்டுகள் திருமதி அக்கியூனோ பதவி வகிக்க வழிசெய்யும் நகல் அரசியல் சட்டத்தை நிராகரித்து வாக்களிக்கும்படியும் திரு. என்றிலே மக்களைக்கேட்டுக்கொண்டார்.

பதவி துறந்த திரு பெர்டினண்ட் மார்க்கோஸின் சொந்த மாநிலத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் மேடையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்தார். (இ-எ)

## குவைத் பிடிவாதமாக நிற்கிறது

குவைத், ஜன 13

அறிவிக்கப்பட்டபடி இம்மாதம் 26 ஆம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் இஸ்லாமிய உச்சி மாநாட்டை நடத்துவது என்று குவைத் விடாப்பிடியாக நிற்கிறது.

குவைத்தில் மாநாடு நடைபெற்றால் கலந்து கொள்ளப் பாவது இல்லை என்று ஈரான் அறிவித்து விட்டது.

உச்சி மாநாட்டில் ஈரான் பங்குபற்றும் என்று குவைத் நம்பிக்கை வெளியிட்டு உள்ளது (இ-எ)

## மத்திய கிழக்கு பிரச்சினை:

## தீர்வு நெருங்குகிறது என்கிறார் இஸ்ரவேல் மந்திரி

வாஷிங்டன், ஜன. 13

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது முன்னர் இருந்ததிலும் பார்க்க மிக நெருங்கி வந்து உள்ளது

இப்படி இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர் திரு. சிமொன் பெரெஸ் தெரிவித்தார்.

இத்தாலி பயணத்தை முடித்துக் கொண்ட பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் திரு பெரெஸ் இத்தகவலை வெளியிட்டார்

மத்திய கிழக்கு பற்றிய முன்னைய நிலைப்பாடுகள் மாற்றம் அடைந்து வருகின்றன ஜோர்தான் மன்னர் ஹுசேன், சமாதான மாநாட்டை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து மீண்டும் முயற்சித்துவருகிறார்

இப்படி திரு பெரெஸ் மேலும் தெரிவித்தார். (இ-எ)

## 125 ஆவது பிறந்ததின கொண்டாட்டம்

புதுடில்லி, ஜன 13

சுவாமி விவேகானந்தரின் 125 ஆவது பிறந்த தினம் திங்கட்கிழமை இந்தியாவில் கொண்டாடப்பட்டது.

புதுடில்லியிலும் ஏனைய இடங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன

''சுவாமி விவேகானந்தர் சாதாரண அறிவும் பெருநோக்கும் படைத்தவர். குறுகிய எண்ணத்துக்கே இடங் கொடுக்காதவர். இளைஞர்கள் அன்னாரின் உபதேசங்களின்படி நடக்க வேண்டும்'' —

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தனது செய்தியில் குறிப்பிட்டார் (இ-எ)

## ரஷ்யாவிலும் இன மோதல்

மாஸ்கோ, ஜன 13

சோவியத் நாட்டில் உள்ள கஸாகிஸ்தான் மாநிலத்தில் இரண்டு இனங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## வெளி உலகில்

## அன்பு காட்டுங்கள் யுத்தம் வேண்டாம் என்கிறது காபூல் வானொலி

இஸ்லாமாபாத், ஜன. 13

''அன்பு காட்டுங்கள்; யுத்தம் வேண்டாம்''...

இப்படி காபூல் வானொலி ஆப்கன் கிளர்ச்சியாளர்களை கோரி வருகிறது.

ஆப்கன் அரசு தன்னிச்சையாக பிரகடனப்படுத்தியுள்ள ஆறுமாத கால யுத்த நிறுத்தம் நாளை வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வருகிறது.

அதைத் தொடர்ந்தே ஆப்கன் கிளர்ச்சியாளருக்கு எதிரான தொனியை காபூல் வானொலி மாற்றியுள்ளது (இ-எ)

## வளைகுடாவில் தொடர்ந்து கடும் யுத்தம்

தெஹ்ரான் ஜன. 13

ஈரானும் ஈராக்கும் ஐந்தாவது நாளாகவும் மும்முரமாக நேற்றும் சண்டையில் ஈடுபட்டன.

ஈராக்கின் பஸ்ரா நகரை அடுத்த பகுதியில் இரு தரப்புப் படைகளும் மோதிக் கொண்டன.

கிராமங்கள், பட்டினங்கள் சில விமானத் தாக்குதலுக்கு இலக்காகின.

ஏராளமான சிவிலியன்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (இ-எ)

## செய்திக்கொத்து

### 7 ஆம் ஆண்டு ஆரம்பம்

வட்டுக்கோட்டை ஜன 14

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் இவ்வாண்டு முதல் ஏழாம் ஆண்டு (ஆறும் வகுப்பு) ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இவ்வகுப்பில் சேர்ந்து கொள்ள விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு மேற்படி வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினம் தெரிவித்துள்ளார் (இ-161)

### நூல் வெளியீடு

நீர்வேலி, ஜன 14

வாரெமு இளைப்பாறிய அதிபர் சபா. கதிரவேலுவின் 'வாரெமு வீரகத்தி விநாயகர் போற்றி மணிமாலை' நூல் தைப்பொங்கல் தினமான இன்று புதன்கிழமை காலை 10 மணி அளவில் மேற்படி கோவில் முன்றலில் வெளியிட்டு வைக்கப் கப்படும்.

விழாவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

கவிஞர் முருக. வே. பரமநாதன் தலைமையில் விழா நடைபெறும் (இ–110)

### இடமாற்றம்

சுன்னாகம், ஜன 14

சுன்னாகம் தபால் சேவை பணிமனை அதிபர் திரு எஸ். ஆறுமுகசாமி கல்முனை தபால் சேவை பணிமனைக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ–27)

### அகதி மாணவர் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

வெளிமாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு அகதிகளாக இடம் பெயர்ந்து ஜீ சி ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் புள்ளிகள் யாழ் கல்வித்திணைக்களத்திற்கு கிடைத்துள்ளன.

வண்ணை நாவலர் மகா வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எடுத்த இந்த மாணவர்கள் தமது புள்ளி விவரங்களை கல்வித்திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் என கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ–5)

### தபால் பைகள் இல்லை

இளவாலை, ஜன 14

யாழ் பிரதம தபாலகத்திலிருந்தோ, பண்டத்தரிப்பு தபாலகத்திலிருந்தோ தபால்பைகள் கிடைக்காது இளவாலை உப தபாலகம் வெறிச் சோடிக் கிடக்கின்றது. (இ-48)

### உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

யாழ்ப்பாணம், ஜன 14

ஈழத்து எழுத்தாளர்களினது விவரங்களையும் முகவரிகளையும் மற்றும் தமிழ் கலாசார கழகங்களின் விவரங்களையும் உலகளாவிய தமிழர்களின் கலாசார நோக்கங்களுக்காக இலங்கைக் கிளையின் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது. (இ)

### ஜப்பானிய லயன்ஸ் உதவி

யாழ்ப்பாணம், ஜன 14

ஜப்பானிய லயன்ஸ் கழகம் கிளிநொச்சி அகதிகளுக்கு உடுபுடவைகளை அன்பளிப்புச் செய்துள்ளது

கிளிநொச்சியிலுள்ள லயன்ஸ் கழகம், பிரசைகள் குழு ஆகியன இப் புடைவைகளை அகதிகளுக்கு கொடுக்க சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. (இ)

### இலவச பாட நூல்கள் இல்லை

இளவாலை, ஜன 14

இளவாலைப் பகுதி மாணவர்கள் இலவச நூல்களின்றி தவிக்கிறார்கள்.

பொதுவான புதிய திட்டத்துக்குரிய நூல்கள் கிடைக்கவில்லை.

பழைய புத்தகங்களைத் தற்காலிகமாக வைத்து உபயோகித்தாலும் புதிய திட்டமோ அதற்குரிய பாடத்திட்ட வழிகாட்டிகளோ இல்லாது ஆசிரியர்கள் திண்டாடுகிறார்கள். (இ-48)

### பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி

ஊர்காவற்றுறை ஜன 14

ஊர்காவற்றுறை தெங்கு ... கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி ஊட்டுவதில் உதவ நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த ஏற்பாட்டின் முதற்கட்டமாக மூன்று இடங்களில் பாலர்பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன (இ-16)

### பரீட்சை புள்ளி விவரம்

பளை, ஜன. 14

பளை மகா வித்தியாலயத்தில் 1986 ஜீ சி. ஈ. உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் புள்ளி விவரங்கள் வந்துள்ளன.

இவற்றில் க. யோகநாதன் வர்த்தகப்பிரிவில் (269) புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி கல்வி வட்டார பகுதியில் முதல் இடத்தை தட்டிக் கொண்டார். (இ-ரி)

### கண்டனத் தீர்மானம்

வட்டுக்கோட்டை, ஜன 14

எரிபொருள் தடையை உடனடியாக நீக்கி யாழ் மாவட்டத்திலுள்ள பொது மக்களுக்கு உதவி புரிய ஆவன செய்ய வேண்டும்.

மேற்கண்ட தீர்மானம் பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்க விசேட செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ-161)

## சிரமதானம் மூலமே நாட்டை முன்னேற்றமுடியும்

### பொதுக் கூட்டத்தில் உரை

இளவாலை, ஜன. 14

அரசின் உதவி தற்போது கிடையாததால் சிரமதானமும் சொந்த முயற்சியுமே நம் நாட்டை முன்னேற முடியும்

சித்திரமேழி – போயிட்டி – துன்மலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் சித்திரமேழி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்றது

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்திசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தின் தலைவர் திரு. கா. திருநாவுக்கரசு கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

பொதுக்கூட்ட அறிக்கையும் ஆண்டறிக்கையும் வரவு செலவு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டன.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். பி. ஜெயக்குமார், கிராம சேவையாளர் திரு. வே. நடராசா ஆகியோர் இக்கிராம அபிவிருத்திச் செயற்பாட்டைப் பற்றியும் அதன் முன்னேற்றத்தைப் பற்றியும் பேசினர் (இ-48)



### பொய்யாமொழி

குறள்:

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

பொருள்

எல்லாப் பொருளுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றுக்கெடுமாறு ஒழுகினால், சார்வதற்கு உரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையா.

## தீவுப்பகுதியில் புகையிலைக்கு பதிலாக வெங்காயச் செய்கை

வேலணை, ஜன 14

தீவுப்பகுதியில் இம்முறை பலர் புகையிலைச் செய்கையைக் கைவிட்டு அதற்குப் பதிலாக வெங்காயச் செய்கையை மேற்கொண்டுள்ளனர்.

தீவுப் பகுதிக்கான போக்குவரத்துத் தடைப்பட்டதே பலர் புகையிலைச் செய்கையைக் கைவிடக் காரணம் ஆகும்

புகையிலைச் செய்கைக்கு தேவையான வெளியூர் எரு, புகையிலை அறுவடைக்குத் தேவையான ஊமல், தென்னம் மட்டை என்பன கொண்டு வருவதற்கும் போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு தீவுப்பகுதி விவசாயிகள் முக்கியமாக வேலணை, சரவணை, நாரந்தனை, சுருவில், கரம்பொன், புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் வெங்காயச் செய்கையில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். (இ-167)

### கருத்தரங்கு

ஊர்காவற்றுறை, ஜன 14

குடாநாட்டில் உள்ள பல்துறை அறிஞர்களை அழைத்து அவர்கள் சார்ந்த துறைகளின் அறிவை மற்றவர்களுக்கு வழங்கு கருவில் சனசமூக நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

இச்சனசமூக நிலையத்தின் செயற்குழு அண்மையில் புனரமைக்கப்பட்டு, புதிய அங்கத்தவர்கள் தெரிவாகினர். தலைவராக அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். (இ-16)

## அத்திவார வேலை பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜன. 14

450 படுக்கைகள் கொண்ட யாழ் போதனா வைத்தியசாலையின் புதிய மாடிக் கட்டடத்தின் அத்திவார வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

கட்டடம் அமைந்துள்ள மண்வளத் தன்மையால் உத்தேசித்ததிலும் பார்க்க அதிக ஆழத்திற்கு அத்திவாரம் போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு சிவதாசன் தெரிவித்தார்.

தற்போது முதலாம் மாடிக்கான தளம் அமைக்கும் வேலைகளும் இரண்டாம் மாடிக்கான தூண்கள் எழுப்பும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து கட்டப்படும் இக்கட்டட வேலைகள் 1988 ஜனவரி மாதத்துடன் பூர்த்தியடையும். (இ–5)

## கடவுச்சீட்டில் குளறுபடி

வேலணை, ஜன. 14

கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்தவருக்கு வேறு ஒருவரின் கடவுச் சீட்டு தபாலில் வந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:–

மூன்று மாதங்களுக்கு முன்னர் சரவணையைச் சேர்ந்த கந்தையா கிருஷ்ணபாலன் (22 வயது) என்பவர் யாழ் கச்சேரியில் கடவுச் சீட்டு பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தார்.

கடந்த 9ஆம் திகதி இவரது முகவரிக்கு கடவுச் சீட்டு ஒன்று வந்து சேர்ந்தது.

கடிதத்தை உடைத்துப் பார்த்த பொழுது இவரது கடவுச்சீட்டுக்கு பதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் சனியர் திருமதி பார்வதியம்மா – பத்மநாதன் என்பவரின் கடவுச் சீட்டு இருந்தது. ஆனால் இந்தக்கடவுச் சீட்டுடன் க. கிருஷ்ணபாலனின் பிறப்புச் சான்றிதழ் வைக்கப் பட்டிருந்தது. (இ–167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலோ பொங்கல்!

# உதயன் உழவர் திருநாள் சிறப்பிதழ்

எங்கும் மங்களம் தங்குக!!

## இயற்கையோடு இயைந்து இந்துக்கள் பொங்கும் நாள்!

மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

தமிழ் மக்களுடைய வாழ்க்கை இயற்கையோடு இயைந்த ஒன்றாகும். அவர்கள் இயற்கையில் தெய்வத்தைக்கண்டு மகிழ்ந்தனர்.

ஐயாறு அடைந்த பொழுது அப்பர் சுவாமிகள் பல பறவைகளையும், மிருகங்களையும் கண்டு சிவசக்தி வடிவமாக அவை காட்சியளித்தன என்று பாடியுள்ளார்

தமிழ் மக்களுடைய தொழில் கலை, கலாசாரம், வாழ்க்கை நெறி என்பன தட்ப வெப்ப நிலைக்கும் சூழலுக்கும் ஏற்ப அமைந்திருந்தது.

அவர்கள் கடின உழைப்பின் பின் சிறிது உற்சாகமாக இருக்கவும், தொல்லைகள், இன்னல்கள் என்பவற்றை மறந்து இன்பமாக வாழவும் விழாக்களையும் பண்டிகைகளையும் கொண்டாடினார்கள்.

ஆடிமாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையும் மக்கள் நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு, மார்சழி மாத இறுதியில் அறுவடை செய்வார்கள்.

சூரியன் தனுராசியிலிருந்து மகரத்தில் தை மாதம் 1ஆம் நாள் பிரவேசிக்கிறுன். ஆகவே இந்நாள் மகரசங்கிராந்தி எனவும் அழைக்கப்படுகிறது அன்று விவசாயிகள் பொங்கி சூரிய பகவானை வணங்குகின்றனர்

சூரிய வழிபாடு மிகவும் தொன்மையானது சூரியன் சக்தி, ஒளி, வெப்பம், மழை, ஊட்டச்சத்து என்பவற்றை தந்துதவுகிறது. இரவு முழுவதும் துன்பத்தில் மூழ்கியிருந்த உலகிற்கு சூரிய உதயம் புத்துணர்ச்சியையும் குதூகலத்தையும் கொடுக்கிறது. சூரியோதயத்தைக் கண்ணுற்ற பறவைகள் இனிய கீதங்களை இசைக்கின்றன என்றால் ஆறறிவு படைத்த மக்கள் மனம் எவ்வளவு பேரானந்தம் அடையும் என்று சொல்லத் தேவையில்லை

புதிய பானையில் புதிய நெல்லில் இருந்து பெற்ற அரிசியை இட்டுப் பொங்குவது ஓர் உயர்ந்த தத்துவத்தை உணர்த்துகிறது. பானையிலே இட்ட பால் பொங்குவதுபோல மக்கள் உள்ளத்திலே உயர்ந்த எண்ணங்கள் பொங்கி எழ வேண்டும். உயர்ந்த எண்ணங்கள் அமைதியான நல்வாழ்வு வாழ வழிகாட்டும். பொங்கிய பின் சூரிய பகவானுக்கு அதனை அர்ப்பணித்து அதன்பின் அவர்கள் சுற்றம் சூழ நண்பர்களுடன் உண்டு மகிழ்வார்கள்

தைப்பொங்கல் உழவர் திருநாள் எனவும் கூறப்படுகிறது உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய ஏற்ற திருநாள் பொங்கல் விழா நாள் என்றால் மிகையில்லை.

ஒரு நாட்டின் பொருளாதாரம் விவசாயத்திலும் தொழிலிலும் தங்கியுள்ளது. உழவின் சிறப்பை திருவள்ளுவரும் ஔவையாரும் மிக அழகாகக் கூறியுள்ளனர் எவருக்கும் அடிமைப்படாது சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழும் உழவனுடைய சிறப்பு—பொங்கல் விழா மூலம் உயர்வடைகிறது

நமது நாட்டிலே வாழுகின்ற சைவசமயத்தவர்கள் எல்லோரும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த போதிலும், செய்தொழில் வேற்றுமை கருதாது பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றனர். எனவே சமூகத்தில் ஒருமைப்பாடு ஏற்பட வழி பிறக்கிறது.

தமிழ் மக்கள் கவின் கலைகளில் ஈடுபாடுள்ளவர்களாகவும், விஞ்ஞான மனப்பாங்குள்ளவர்களாகவும், விருந்தோம்பலில் சிறந்தவர்களாகவும் விளங்கினார்கள் என்பதற்கு பொங்கல் விழா ஓர் எடுத்துக்காட்டாகும். கோலமிடுவது, மாலைகள் கட்டுவது, தோரணங்கள் தூக்குவது என்பன நம்மவர்களுடைய முருகியல் உணர்வை எடுத்துக்காட்டும் முறையில் அமைந்துள்ளன தைப்பொங்கலைத் தொடர்ந்து அடுத்த நாள் இடம் பெறும் பட்டிப் பொங்கல் உழவர் பெருமக்களின் உள்ளத்தின் உயர்வைப் பறைசாற்றுகிறது தனது உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கிய மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பாங்கில் அது அமைந்துள்ளது.

சமய நூல்கள் எல்லாம் பசுக்களின் மகிமை பற்றி எடுத்துக் கூறுகின்றன கோபூசையின் மகிமையை உணர்த்த பண்டைத் தமிழர் பட்டிப் பொங்கலைக்கொண்டாடி தம்மைப் போல மாடுகளும் வாழவேண்டும் என்று செயற்பட்டனர்.

பொங்கல் விழா மக்களுடைய சமூக வாழ்வுடன் நெருக்கமாக தலைந்துள்ள காரணத்தால், சமூகத்தில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் சமய, சமூக, கலை பற்றிய உணர்வும், அவை தொடர்பாக கலைகளும் இன்று வரை நிலைத்துள்ளன. ✱

## கொல்லேறு தழுவலில் வென்ற அடலேறுகளை தழுவும் பெண்கள்

பௌராணிக வித்தகர் வ. குகசர்மா

தைப் பொங்கலுக்கு பலவித காரணங்கள் கூறப்படுகின்றன. மாரியில் விளைவிக்கப்பட்ட நெல்லை அறுவடை செய்யும் காலம் இது அறுவடைசெய்த புதுநெல்லை அரிசியாக்கிப் பொங்கி அந்த விளைவிற்கு பல வகைகளில் காரணமாயிருக்கும் சூரியனுக்கு முதலில் பொங்கிப் படைத்து மகிழ்வதும் அவற்றில் ஒன்று.

இதனைத் தொடர்ந்து மக்களது நல்வாழ்விற்குக் காரணமாய் இருப்பதும் பயிர் விளைவிற்கு ஏற்ற பசளையைத் தருவதோடமையாது உழுது வயலைப் பண்படுத்தவும் உதவும் மாடுகளுக்குரிய பட்டிப் பொங்கல் என்னும் திருநாள் கொண்டாடப்படுகிறது. இந்த நோக்கில் பார்க்கும் போது இப்பண்டிகைகள் தமிழரின் நன்றி மறவாமையைப் புலப்படுத்துகிறது எனலாம்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். தையில் நடக்கப்போகிற மங்கல கருமங்களுக்கு மார்சழி நீராடலிலே வழி வகுக்கப்படுவதைப் பார்க்கிறோம். மார்கழி நீராடலின் உட்கருத்தை திருவெம்பாவை பாடிய மணிவாசகரும், திருப்பாவை பாடிய ஆண்டாளும் தமது பாடல்களில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

தங்களுக்கு நல்ல கணவன் வரவேண்டும் என மார்கழி நீராடும் பெண்கள், உலக சுகத்தையும் மறக்கவில்லை. திங்கள் மும்மாரி பெய்ய வேண்டும், பயிர்கள் செழித்து வளர வேண்டும், பசுக்கள் குடம் நிறையப் பால் தர வேண்டும் என்றெல்லாம் வேண்டுதல் செய்த தைப் பாடல்கள் மூலம் அறிகிறோம்.

உலக நன்மைக்கும், சைவசமயத்திற்கும் மிகவும் வேண்டப்படுவன பசுக்கள் திருமஞ்சனத்திற்கும் யாகத்திற்கும் வேண்டிய பொருளையும் சிவசின்னமாகிய விபூதிக்கு முதற்காரணத்தைப் பசுவிலிருந்து பெறுகிறோம். சிவபெருமானைத் தாங்கும் ஊர்தி இடபம்.

இவ்வாறு பெருமை வாய்ந்த ஆநிரைகளை மேய்த்துப் பாதுகாத்து வளர்ப்பவர்கள் ஆயர் எனக் கூறப்படுவர் அவர்களது இத்தொழிலே அவர்களுக்கு மேன்மையை அளிக்கிறது. கண்ணன் ஆயர்பாடியில் பிறந்து ஆநிரை மேய்த்த சம்பவம் உலகப் பிரசித்தம்.

தைப் பொங்கலுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் கொண்டாடப்படும். அதன் பின்பு ஆயர்குலத்தவர் தமது கன்னிப் பெண்களுக்கு மணவாளனைத் தெரிய ஒரு வழியை கையாளுகிறுர்கள். அதற்கும் எருதுகளே உதவி செய்கின்றன 'கொல்லேறு தழுவல்' என்னும் வீரம் செறிந்த விளையாட்டு மூலம் இத்தெரிவு நடைபெறுகிறது.

இதில் ஒரு காட்சியைப் பார்ப்போம்.

''அழகாக வரிசை வரிசையாக நிற்கின்றன எருதுகள். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கன்னிப் பெண்ணைக் குறித்து விடப்பட்டன. அவற்றின் முன் பல இளைஞர்கள் போய் நின்றுர்கள், காளைகள் கோபம் கொண்டு இளைஞர்கள் மேற் பாய்ந்தன.

புழுதி எழுந்தது மக்கள் அஞ்சினுர்கள் குறிப்பிட்ட பெண்மீது காதல் மிக்க இளைஞன் தனது நெடிய தோளால் அந்தக் காளையை இறுகத்தழுவி, அதன் இமிலின் மீது ஏறி அமர்ந்து இறுதியில் அதை அடக்கி விட்டான்.''

இது ஒரு வெற்றிக் காட்சி இதிலே தோல்வியடைந்து காயப்படுவதும் சில சந்தர்ப்பங்களில் மரணம் ஏற்படுவதும் உண்டு. ஆனல் இவற்றிற்கஞ்சி கொல்லேறு தழுவ பின் வாங்கும் வாலிபனை ஆயர் மகள் விரும்பமாட்டாள்.

கொல்லேறு தழுவல் முடிந்தபின் வெற்றி பெற்ற ஆடவனைப் பாராட்டிப் பெண்கள் பாடுகிறுர்கள். அந்தப் பாட்டில் அவர்களின் மனநிலையைப் பார்க்கலாம்.

''வலியா அறியா
உயிர் காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும்
நெஞ்சினுர் தோய்தற்கு
எளியவோ ஆயர்
மகள் தோள்''

''கொல்லேற்றுக்
கோடஞ்சு வானை
மறுமையும் புல்லாளே
ஆயர் மகள்''

இக்காட்சி கலித்தொகை நூலில் "முல்லைக் கலி' என்னும் பகுதியில் உள்ளது. இங்கே கூறப்பட்ட கொல்லேறு தழுவல் என்னும் வழக்கம் இப்போது இந்தியாவில் ''மஞ்சு விரட்டு'' என்னும் மறுபெயரில் சில இடங்களில் காணப்படுகிறது. ✱



## உழவர்கள் உவகை பொங்கும் உதயனுக்கு உகந்த திருநாள்

ஆத்மஜோதி நா. முத்தையா

பொங்கல் என்று சொல்லும்போதே உள்ளமும் பொங்குகின்றது; உள்ளத்தில் ஒரு புத்துணர்வும் ஏற்படுகின்றது. தமிழ் மக்களின் இறை வழிபாட்டுடன்இயற்கை வழிபாட்டின் மேன்மையையும் புலப்படுத்துவது பொங்கல்விழா, தமிழர் சமுதாயம் உழவுத் தொழிலோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தது.

உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்ந்தது நமது சமுதாயம். செய்யுந் தொழிலே தெய்வமென வாழ்ந்தது நமது சமுதாயம் நெல் முற்றி விளைந்த உடனே இந்த விளைவுக்கு மூல காரணம் யாது என ஆராய்ந்தான் தமிழன். நீருயர நெல்லுயர்ந்தது நீருக்குக் காரணம் சூரியன் என்பதை உணர்ந்தான். மனித சமுதாயம் முதன்முதல் கண்ணுல் கண்ட தெய்வம் சூரியனே. வைஷ்ணவர்கள் சூரிய நாராயணன் என்றும், சைவர்கள் 'சிவ சூரியாயநம' என்றும் சூரியனைப் போற்றினர்

### மாடு என்றால் செல்வம்

தமிழ் மக்கள் நன்றி மறவாதவர்கள். தெற்கு நோக்கிச் சென்ற சூரியன் தை மாதம் முதல் தேதி வடக்கு நோக்கி வருகின்றான்.

சூரியனை வரவேற்கு முகமாகவும் தனது நன்றிக் கடனைச் செலுத்து முகமாகவும் உழவன் சூரியனுக்குப் பொங்கி விட்டு வணங்குகின்றான்.

உழவனுக்குத் தொழிலிலே சூரியனுக்கு அடுத்தபடியாக உதவி செய்தவர்கள் யார் என்று சிந்திக்கும்போது மாடு தான் அவன் உள்ளத்தில் காட்சி கொடுக்கிறது.

மாடு என்றால் செல்வம் என்பதுதான் பொருள் தனக்கு உதவி செய்த மாட்டுக்கு நன்றி தெரிவிக்கு முகமாக அடுத்தநாள் மாட்டுப் பொங்கலாக மலர்கிறது மாட்டுப் பொங்கல் அன்று மாடுகளை நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொம்புகளுக்கு வர்ணம் பூசி மாடுகளுக்கும் பொங்கற்சோறு படைத்து மகிழ்வார்கள். எங்கள் நாட்டில் மாட்டுப் பொங்கலில் அன்று வண்டிச்சவாரி செய்து மகிழ்ந்தகாலமும் ஒன்று' இருந்தது.

தமிழ் நாட்டில் சில இடங்களில் மாலையில் எருதுகளை வண்டிகளிற் பூட்டி 'பொங்கலோ பொங்கல்' என்று ஆரவாரித்துக்கொண்டு சிறுவர்கள் செல்லும் காட்சி பார்க்க வெகு ஆனந்தமாக இருக்கும்

மாட்டுப் பொங்கலைச் சில இடங்களில் 'பட்டிப் பொங்கல்' என்றும், 'பட்டி ஆவுடையார் பொங்கல்' என்றும் அழைப்பர். பெற்ற தாயைவிட பலவிதங்களில் நமக்குப் பயன்படும் பசுவைத் தமிழ் மக்கள் தெய்வமாகவே கருதி வழிபட்டனர்.

### ஐதீகம்

பசுவின் உடல் முழுவதிலும் தேவர்கள் வசிப்பதாக ஐதீகம். சிவாலயங்களில் கோபூசை என்று தனியாகவே ஒரு பூசை உண்டு.

வேத காலத்தில் பசுக்கொலை மகாபாதகச் செயலாகவும் பிராயச்சித்தமற்ற கொடூரச் செயலாகவும் மதிக்கப் பெற்றது. மனு பசுக் கொலையை உபபாதகம் என்று தன் தர்மசாஸ்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறுர். அர்த்த சாஸ்திரத்தை இயற்றிய கௌடில்யர் பசு திருடுபவனுக்கே கொலைத் தண்டனை விதித்தார். ஒரு

(5-ஆம் பக்கம் பார்க்க)

### விடிவுப் பொங்கல்

உளத்தினிலே உறுதியுடன் உழவன் நின்று
களத்தினிலே பணியாற்றி அமுதம் பெறவே
அளப்பரிய துணைசெய்யும் உதயத் தலைவன்
கிழக்கினிலே கிளர்ந்தெழுந்தான் ஒளியைத்தரவே!

உளத்தினிலே உவகைபொங்க உழவன் இன்று
கலத்தினிலே பால் பொங்க அமுதம் ஆக்கி
அளப்பரிய நன்றியுடன் படையல் தந்தான்
களிப்புடனே வாழ்ந்திடவே காலம் மாறும்!

வளத்தினிலே குறைகளுண்டோ வாழும் நாட்டில்
செழித்திடவே துறைகளுண்டு சீராய் நோக்கி
அளித்திடுவோம் பங்களிப்பை ஆர்வம் கொண்டே
விழித்தெழுவோம் வீரர்களாய் விடியல் வேண்டி!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இதயத்திக்கும்
பொங்கல் வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சஞ்சிகைகள், கலண்டர்கள், டயறி வகைகள், வாழ்த்து மடல்கள் அனைத்தையும் மலிவு விலையில் பெற இன்றே நாடுங்கள்.

NIRUPA TRADER

இன்றுமுதல் சகலரக படச்சுருள்கள் எம்மிடம் கிடைக்கும்.
அத்துடன் படச்சுருள்களும் கழுவிக் கொடுக்கப்படும்.
(Printing and Developing)

நிருபா ரேடர்
2, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!

Home Finance Ltd
82, Kannathiddy, JAFFNA.
Phone: 24310; 22436

'Trade Centre'
155, MANIPAY ROAD,
JAFFNA.

HEAD OFFICE:
HOME FINANCE LTD.
463, GALLE ROAD, COLOMBO-3.
Phone: 589,190; 587,680.

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
அனைவருக்கும் எங்கள்
பொங்கல் நல் வாழ்த்துக்கள்

பிரயாண ஒழுங்குகள்

- நோர்வே
- லண்டன்
- ஜேர்மனி
- சிங்கப்பூர்
- அவுஸ்திரேலியா
- சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாண ஒழுங்குகளை உடனுக்குடன் செய்துகொள்ள உடனடியாக எமது அலுவலகத்தில் சந்தித்து பதிவுசெய்து கொள்ளவும்.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS
றை ஸ்ரார் றவல்ஸ்
இல 6, நவீன சந்தை (மேல் மாடி),
யாழ்ப்பாணம்.

மு கு. யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலுவலகம் மூடப்பட்டிருந்தால் உங்கள் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்ட கீழ்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.

1. 71, குருசோ வீதி), கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. வ. குகராசா, மயிலியற்புலம், கந்தசாமி கோயிலடி, கரவெட்டி வடக்கு.
3. ந. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலோ பொங்கல்!

# உதயன் உழவர் திருநாள் சிறப்பிதழ்

எங்கும் மங்களம் தங்குக!!

## கவிதைப் பொங்கல்

### பொருமுகின்ற பொங்கலிது

ஊருக்கே எரியூட்டி
"உலைவைத்துச்" சந்நிதிகள்
தேருக்கே தீவைத்துச்
செய்திகளால் "மெழுகு" குலத்
தாரிட்ட பிணக் "கோலந்"
தமிலிட்ட பொங்கலிடை
பூரிக்காப் பொங்கலிது,
பொருமுகின்ற பொங்கலிது

அகதிகளாய் முகாம்களிலே
அரைவயிற்றுப் பட்டினிகள்!
நகந்தேய்க்கும் சொறிசிரங்கு!
நானூறு நோயங்கு!
'வகையுண்டு தைபிறந்தால்
வழிபிறக்கும்' எனநம்பிப்
பகலவனே, பொங்குகிறோம்
பலவீடு தண்டிவந்து!

-ச. வே: பஞ்சாட்சரம்

### மானக் குறள்

தமிழரின் திருநாள் செந்நெல்
தந்தவன் உழவன் பெருநாள்
வளமெலாம் ஈய்ந்த இறையாம்
வருணனைத் தொழுகும் நன்நாள்
உழவினர் கைமடங்கின்
உலகமே இல்லை என்ற
நிலையினை ஏரின் மாண்பை
நிறைத்திடும் பொங்கற் புதுநாள்!
உழவரின் உள்ளம் பொங்க
உதயவின் கருணை பொங்க
குழவிகள் மகிழ்ந்து பொங்கக்
கோமகள் பாலும் பொங்க
இழிநிலை அடிமை வாழ்வை
இளசுகள் அழித்துப் பொங்க
உயிரினும் மேலாம் மானக்
குறள் சுவைத் துலகம் பொங்கும்!
"இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

-நெடுந்தீவு லக்ஸ்மன்

### குறிஞ்சிப் பொங்கல்

பொங்கு கின்றார் குறிஞ்சியிலே
பொங்குகின்றார்! தினம்
பொங்கியே பழகியதால் பொங்குகின்றார்!
தங்கிப் பல் லாண்டாய் மலைமக்கள். இங்கு
தங்களுக் கென்று தான் யாது வைத்தார்!
பொங்குதல் ஒன்றுதான் சொந்தம்
அவருக்கு(ப்)
பொங்கித்தான் பார்க்கட்டும் பார்க்கட்டுமே

-உதயபாரதி

### வளம் பெறப் பொங்குகவே

பொன்னும் மணியும் விளைந்திடவே!
புன்செய் நன்செய் செழித்திடவே!
கன்னலும் நெல்லும் வளர்ந்திடவே!
கழனிகள் எங்கும் வளம் பெறவே!
அன்னை உமையவள் அணைத்த பிரான்
அருளை வேண்டும் தைப் பொங்கல்
தண்மை அளிக்கும் அறஞ் செய்தோர்
நற்பாக்கியம் போலப் பொங்குகவே!

-மலர்ஜீவன்

# நன்றி மறவாத தமிழர்களின் நல்லுணர்வில் பிறந்த திருநாள்

**த. காசிநாதன்**

பொங்கல் தினத்திற்கு முதல்நாள்கொண்டாடப்படும் பண்டிகை போகிப் பண்டிகை எனப்படும். பொங்கல் தினத்தின் மறுநாள் கொண்டாடப்படுவது பட்டிப் பொங்கலாகும். இப்பொங்கலை கோபூசை, பட்டிப்பொங்கல், கன்றுப் பொங்கல் எனவும் கூறுவர்.

சைவமக்கள், பொங்கற் புதுநாளில் தாம் எப்படிக் குதூகலமாக இருக்கின்றார்களோ, அதே போல், தங்களுடைய உழைப்புக்கும் உவகைக்கும் உறுதுணையாக இருந்த மாடு கன்றுகளையும் போற்றி, அவைகளுக்காக ஒரு நாளைத் தனியாக ஒதுக்கி மிகவும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள். பசுவின் பெருமையையும் மேன்மையாகிய புனிதத் தன்மையையும். அதனுடைய அருமை பெருமையையும் தெரிந்து விநயத்துடன் போஷிக்கும் விவேகியாகிய மனிதன் தனது பிறப்பே ஏழு வகைப் பிறப்புக்களில் அருமையானது என்பதை உணருகின்றான்.

இப்படியான மனிதப் பிறவியை எடுத்த நாம் பசுவினுக்குப் புல் முதலிய ஆகாரங்களைத் திருப்தியாகக் கொடுத்துக் காத்து, எச்சில் தண்ணீர் கொடுக்காமல், தாரப்பெண் இருக்குமிடத்திலும், அசுசியான இடத்திலும், புறக்கடையிலும் கட்டாமல் கன்றினுக்கு வேண்டியபாலினை விட்டுக் கறந்து, அது பால் தராவிடின் அடித்து அல்லது துன்புறுத்தி அக்கிரமங்களைச் செய்யாது. அதனைக் காப்பாற்றுவோம் என்பதாக இப் பட்டிப் பொங்கல் தினத்தன்று சபதம் எடுத்துக் கொள்ளுதல் நம் தலையாய கடனாகும்.

### பசுவில் தேவர்

பசுவினுக்கு ஒரு வாயுறை கொடுத்து யாவராலும் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள முடியுமென்பது திருமூலரது திருவாக்கு பசுவினது அவயவங்கள் ஒவ்வொன்றிலும் தேவர்கள் இருடிகள் அனைவரும் பொருந்தியிருக் கின்றார்கள் என்பது சைவர்களின் நம்பிக்கை.

பசுவின் நான்கு கால்களில் பிரமதேவன்; பாதங்களில் குபேரன்; இடையில் நாராயணன்; மயிரில் முக்கோடி தேவர்கள்; வாலில் தருமதேவதைகள்; யோனியில் மகாலட்சுமி; மடியில் அமுத கூபாளர்கள்; அடிவயிற்றில் பன்னகர்கள்; வயிற்றில் அக்கினி; முகப்பில் சாவித்திரி; நெஞ்சில் பகலென்னும் தேவதை; வரிமடிப்பில் பார்வதி; கண்டத்தில் சிவன்; தாடையில் அட்டவசுக்கள்; முகவாய்க்கட்டையில் சந்திராசித்தர்; புட்டத்தில் சீவன் முத்தர்கள்; நடுநெற்றியில் சித்தர்கள்; மூக்கில்வாயு; கொம்பில் ஏமன்; செவிகளில் சத்த இருடிகள்; முகத்தில் தேவேந்திரன்; அதன் இரத்தம் சந்திரகலை; மாமிசம் சக்தி என்றவாறு;

திருஞானசம்பந்தர் அந்தணர்க்கு அடுத்த படியாக, 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' எனப் பசு இனத்தை வாழ்த்துகின்றார்.

நீதி தவறாது அரசு செய்து வந்த சோழவள நாட்டரசன் தனது மகன் பசுக்கன்றைத்தேர்ச் சில்லால் நெரித்துக் கொன்றான் என்பதை, நீதி கேட்டு மணிஅடித்த பசுவின் மூலம் அறிந்து அதே சில்லால் தனது மகனையும் கொன்றான் என்பதை அறியும்போது பசுவின் அருமை புலப் படுகின்றது.

பசு தரும் பால், தயிர், நெய்கோசலம் கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்கள் கடவுளுக்கு அபிஷேகம் செய்யப் பயன் படுத்தப் படுகின்றது. எமசரீரம் உள்ள பொழுதே சரீரத்தின் நிலையாமையை அறிந்துபெருங்கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டுஉய்ய, அரன் தமக்கு அபிஷேகம் செய்வதற்கு இன்றியமையாத பூசைத் திரவியங்களைத் தந்துதவும்தேவதைகளைப்பார்க்கிலும் மேலாகிய புனிதம் பெற்ற பசுவினைப் போற்றிப் பேணிக் காத்து அரும் பெரும் புண்ணியங்களைப் பெற்று இன்புற்று வாழ்வோம்.

'ஆவினுக்கு அருங்கலம் அரன் ஐஞ்சாடுதல்' ★

### உழவர்கள்,..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பசுவைக் கொல்வது பல மக்களைக் கொல்வதற்குச் சமம் என்று நினைக்கப்பட்டு வந்தது.

றெஹென்ட் டாக்டர் ஜோன் மாரிசன் என்பவர் பசுக்கொலை பெரும் நஷ்டம் என்று வற்புறுத்தி எழுதியுள்ளார் ஒரு பசு குறைந்தது 14 அல்லது 15 வருடங்கள் உயிர் வாழலாம். இப்பசு தரும் பால் 15440 பேருக்கு ஒரு தினத்திற்குப் போதியதாகும் ஆகவே பசுக்களைக் கொல்வது பாவம் மாத்திரம் அல்ல. பெரிய பொருளாதார நஷ்டமுமாகும்.

நம்மைப் போன்று தரணியில் உள்ள மற்றவர்களும் வாழ்கின்றார்களா? என்று அறிய விரும்பினர் உழவர். அதன் பயனாக எழுந்ததே நாம் காணும் பொங்கல். இதுமாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் நிகழ்கிறது தங்கள் வீடுகளிலிருந்து வெளிப்போந்து உற்றார்க்கு மட்டுமன்றி சுற்றார்க்கும் அலந்தார்க்கும் உதவுங் காட்சியே காணும் பொங்கல்விழா.

**மகரசங்கிராந்தி**

தைத்திங்கள் முதல் நாளன்று, சூரியன் மகர ராசியில் வந்து உத்தராயணம் தொடங்குவதால் வைதிக முறையில் இதனை மகர சங்கிராந்தி பண்டிகை என்பர்.

இதனால் உழவர்களே அன்றி எல்லோரும் இந் நாளைக் கொண்டாடுவர். அடுப்பில் பொங்கல் ஏற்றும் காட்சியை ஆண்டாள் தன் பாசுரத்தில் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

"வெள்ளை நுண்மணல் கொண்டு தெருவணிந்து
வெள்வரைப் பதன் முன்னம் துறைபடிந்து
முள்ளும் இலாச் சுள்ளி எரிமடுத்து
முயன்று உன்னை நோற்கின்றேன்."


பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**ROCK** Engineers & Contractors IN WATER SUPPLY WORKS

குழாய்க் கிணறுகள்
(மெஷின் மூலம்)

உங்கள் நிலத்தில்:
1. மண் கண்டமா
2. களிக் கண்டமா
3. கற் கண்டமா
4. காவி நீரா
5. உப்பு நீரா
6. நீர் போதாதா


என்ன பிரச்சினையென்றாலும் எம்முடன் கலந்தாலோசியுங்கள், மழைகாலம் என்றாலும் தேவையான ஆழத்துக்குத் துளைத்து (Drilling) போதிய தண்ணீர் பெற்றுத் தருவோம்.

24 மணித்தியாலங்களுக்குள் 24 மணித்தியாலமும் தண்ணீர் பெறக்கூடிய கிணற்றை அமைத்துத் தருவோம். தொடர்புகொள்ளவும்

றெக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.



வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்,
சுவைமிக்கது




அண்ணா கோப்பி

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த
பொங்கல் நல் வாழ்த்துக்கள்

நிப்பொன்

உலகின் எப்பாகத்திற்கும் ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை.

★ குறைந்த செலவில் உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும்.
★ ஒரு நிமிடத்துக்குள் சகல நாடுகளுடனும் தொடர்புகளைப் பெற்றுக்கொள்ளவும்.
★ விமானச் சீட்டுக்கள், இந்தியன் விசா, பாஸ்போட், பொண்ட், CONFIRMATION, RE-CONFIRMATION யாவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

சகலருக்கும் எமது சேவையை ஆவலுடன் நல்கக் காத்திருக்கிறோம்.

உங்கள் தேவை எதுவோ?
நாடவேண்டிய இடம்

Niipon Tele Travels (pvt.) Ltd.
No. 2G, Stanley Road, JAFFNA.
Telephone: 24866



பொங்கல் பரிசு!

ஞானம்ஸ் ஸ்ருடியோ

அளிக்கின்றது !!

எல்லாவித கலர் பிலிம் சுருள்களை எங்கள் கம்பியூட்டர் மூலம் விரைவில் குறைந்த செலவில்....

Proccessing Rs. 25-00
Printing P-C Size: Rs. 5-00 EACH

அனுபவமுள்ளவர்களால் தரமான படங்களைச் செய்து தருபவர்கள்....

Gnanams Studio
301, மணிக்கூட்டு வீதி, / 81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone; 23067


★

ஒருவர்:- ஏன் 'பொங்கல்' கட்டியாய்க் கல்லாக்கிடக்கு. கடிபடுகுதில்லை

மற்றவர்:- மனிசி பானையை அடுப்பிலை வைத்திட்டு ரி. வி. யிலை காட்டின புதுப்படம் பார்க்கப் போட்டாள்.

★

ஒருவர்:- இந்தமுறை பொங்கலிலை என்ன விசேஷம்?

நண்பர்:- வழக்கமாய் மனிசியின் பொங்கலில் கல்தான்கிடக்கும். இந்த முறை ஷெல்.


மில்க்வைற் ஆதரவாளர்களுக்கு
எமது பொங்கல் வாழ்த்துக்கள்



ஓம்
உழதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (குறள்:1033)

உழவு செய்து அதனால்கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின்செல்கின்றவரே.

அன்பளிப்பு: மில்க்வைற், யாழ்ப்பாணம்.

"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் நிலை."

உழவர் தமது முயற்சி செய்யாது வாளாவிருப்பராயின் யாவரும் விரும்பும் உணவும் இல்லை, துறவிகளுக்கும் தமது நிலைக்கண்ணே நிற்றலு முடியாது.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்தனுப்பி பயன்தரு பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- மில்க்வைற் யாழ்ப்பாணம்



நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள்
அன்பான பொங்கல் வாழ்த்துக்கள்

பிரயாணத்திற்கு தயாராகுங்கள் உங்களை பாதுகாப்பாக கூட்டிச் செல்ல

GLORIA TRAVELS ஆயத்தமாக இருக்கிறது!

★ நோர்வே ★ ஜெர்மனி
★ கனடா ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு நீங்கள் தயக்கமின்றி செல்ல எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து தருகிறோம்.

எமது பிரயாண முகவர் உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறார்.

பாஸ்போட், பொண்ட் (Bond), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து தரப்படும்.

நோர்வே செல்பவர்களுக்கு இலவச பொண்ட் (Bond) செய்து தரப்படும்

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.
★ எமக்கு வேறு கிளைகள் கிடையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலோ பொங்கல்!

# உதயன் உழவர் திருநாள் சிறப்பிதழ்

எங்கும் மங்களம் தங்குக!!

## பொங்கிடும் பொங்கல்

* செந்தமிழ்ப் ப ‑ பதன்
சிகரமாய் நின்றிடும்
மங்களத் திருநாள்
தைப்பொங்கல்
அந்தமில் லாப்புகழ்
கொண்டிடும் உழவரின்
பைந்தமிழ்த் திருநாள்
தைப்பொங்கல்
செங்கதி ரோன்துதி
செய்திடும் தமிழரின்
சுந்தரத் திருநாள்
தைப்பொங்கல்
இந்தவு லகினில்
ஏர்முனை போற்றிடும்
இன்பநல் திருநாள்
தைப்பொங்கல்

* ஏழிசை வித்தகன்
எழுத்தறி வித்தவன்
ஆழிசெ லுத்துபவன்
யாழில் இசைத்தவன்
யாதவன் பூசகன்
யாவரும் போற்றுபவன்
மேழி பிடித்தவன்
மேன்மை மிகுத்தவன்
பூமியில் வாழ்பவனும்
நாழியளந்தவன் நல்லோர் உழவனின்
நன்னாள் தைப்பொங்கல்

* ஏர்பிடித்துக் கழனியிலே
எழிலான மண்ணுழுது
சீர்சிறக்க விவசாயம்
செய்தினிக்க வாழ்வு தரும்
பேர் படைத்த உழவனவன்
பெருவாழ்வு தானுவந்து
ஊரினிக்க உலகினிக்க
உளமினிக்கும் தைப்பொங்கல்.

* முத்து வியர்வை சிந்தி
முச்சிழுக்கப் பாடுபட்டு
வித்து விதை விதைத்து
விளைந்திடும் நெல்லெடுத்து
பத்துப் பேர்களுக்குப்
படைத்தன்பாய் உணவளிக்கும்
சித்து நிறைந்த அந்த
வித்தகனின் தைப்பொங்கல்

* பொன் விளையும் பூமியிலே
பொறிசரங்கள் பிடித்துழுது
நென் மணியாம் விதை விதைத்து
நீர்ப்பாய்ச்சிக் களையெடுத்து
கண்மணியாய் வளர்த்தெடுத்துக்
காசினிக்கே நெற்குவியல்
மண்மகிழத் தரும் உழவன்
மகிழ்ந்தேத்தும் தைப்பொங்கல்.

கவிமாமணி நா. வீரமணி ஐயர்

# புத்தரிசிப் பொங்கலிட்டு புத்துணர்வு பெறும் காலை

காவேரி யோகநாதன்

சிலப்பதிகார கடவுள் வாழ்த்து கதிரவனையே முதலில்போற்றுகிறது. உலகச் செழுமையின் முதற்பொருளாகக் கதிரவன் கருதப்படுகிறன். அந்தக் கருத்தின் அடிப்படையில் நன்றி உணர்வோடு கொண்டாடப்படும் திருநாளே இன்றைய தைப்பொங்கல்நாள் ஆகும். உழவர் பெருநாளாகவும் இது பெருமையுறுகிறது.

பார்க்கும் இடமெங்கும் பசுமையின் ஆட்சி, ஏரி, குளம், குட்டை, கிணறு எல்லாமே நீரால் நிறைந்து வழிகிறது. ஓடைகள் சலசலத்து ஓடுகின்றன. நெற்கழனி எங்கும் முற்றிய பொற்கதிர்களின் பொலிவு.

பனிக்காலத்தை மெல்லத் தள்ளிவிட்டு வேனில் இளவரசன் வெளிவருகிறன். மக்கள் மனமெல்லாம் மகிழ்ச்சி பொங்கும் காலம். தைமகளின் தலைநாளில் பகலவன் உதயமாகும் அந்த அதிகாலை.

ஆமாம் இன்றுதான் அந்தத் திருநாள்.

புத்தரிசிப் பொங்கலிட்டு மகிழ்கிறார்கள் மக்கள்.

இந்துக்களின் பெருநாட்கள்விழாக்கள், பண்டிகைக் கொண்டாட்டங்கள் ஆகியவற்றில் சிறப்பான கருத்தாழமும், புனிதமும், பயன்களும், படிப்பினைகளும் நிறைந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

மேலைநாட்டவர் இவற்றுக்கு விளக்கம் கண்டுள்ளனர்.

தமிழ் மக்களால் கொண்டாடப்படும் அனைத்து வைபவங்களிலும் ஒழுக்கமும், இறையுணர்வும் நல்லறங்களும் விரவி இருக்கக் காணலாம். உத்தராயண புண்ணியகாலம்தை மாதம். தைக்குமுன்அமைந்த மார்கழி மாதம் பிரம மூர்த்த வேளைக்குச் சமமானது. உத்தராயண புண்ணிய காலமான தைக்கு வைகறையாக மார்கழி மாதம் அமைகிறது. அந்த மார்கழி நீராடல், அநுட்டானம்,

(7 ஆம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கை எனும் விளையாட்டில் பற்றற்று வாழ்வதே வெற்றி!

சுவாமி சித்ரூபானந்தா

கடவுள் என்ற பொருளின் அர்த்தம் என்னவென்றால் உலகில் உள்ள பொருள்கள் யாவற்றுள்ளும் இருப்பவர்; உலகத்திற்கு அப்பால் யாவற்றையும் கடந்தவர் என்பதாகும்.

இவ்வுலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. கடவுள் மனிதனைப் படைத்து இவ்வுலகில் சஞ்சரிக்கும்படி செய்கின்றார்.

அன்னை ஸ்ரீசாரதா தேவி இதை விளக்கும் முறைமிகவும் விந்தையாக இருக்கிறது—

முதன் முதலில் கடவுள் உலகத்தைப் படைத்து நல்ல மக்கள், தர்மம், இன்பம், நீதி போன்றவற்றை மட்டும் உற்பத்தி செய்தார்.

நன்மக்கள் தர்ம வழியில் நின்று கடவுளை அடைந்தார்கள். உலகியல் விளையாட்டும் முடிவடைந்து விட்டது.

உலகியல் விளையாட்டு முடிவுறமல் இருக்க நோக்கம் கொண்டு, தர்மம், அதர்மம், இன்பம், துன்பம், நீதி, அநீதி பகல், இரவு, போன்ற எதிர்பால் தன்மைகளை நிலைநிறுத்தி, மனிதனையும் படைத்து விட்டார்.

படைக்கப்பட்ட மனிதர்களில் சிலர் நல்ல வழியிலும், சிலர் அதர்மமான வழியிலும் செல்லத் துணிந்தார்கள். உலக விளையாட்டு முடிவில்லா விளையாட்டாக அமைந்தது.

இந்த விளையாட்டில் பற்றுதலுடன் வாழ்பவர்கள் காலப்போக்கில் வாழ்க்கையின் தத்துவத்தை மறந்து விடுகிறார்கள். தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை சரிவரப் புரியாமல் மேலும் சிக்குண்டு விடுகிறார்கள்.

ஸ்ரீஇராமகிருஷ்ணர் இதை ஒரு கதை மூலம் விளக்குகின்றார்.

ஒரு மீன் பிடிப்பவன் தூண்டிலைக் கடலில் எறிகிறன்.

நித்திய சித்தர்களாகிய நாரதர் போன்றவர்கள்

(7-ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவாய் செயற்கண் நிலைத்து

பொங்கற் புதுநாளில் பூக்கும் புதுநினைவு
எங்கும் இதமார்ந்து ஏற்றமுற – இங்கிதமே
பூக்கட்டும் அன்பே பொலியட்டும்
புன்மைவழித்
தாக்கங்கள் நீங்கட்டும் தா.

* * *

தாவென்றே கேட்டால் தடையேதும்
இல்லாமல்
வாவென்றே கூறி வரவேற்று – போவென்றே
ஏமாற்றும் பேர்வழிகள் ஏதேதோ
இத்தலத்தில்
நாமாற்றிக் கொள்வார் நசிந்து.

* * *

நசியற் குணமுளரில் நம்பிக்கை [வைத்தால்
கசியும் நிதமிரத்தக் கண்ணீர் – நசியாத
கொள்கை நிறைநினைவே கூர்வாய்குலம் வாழ
விள்ளுவாய் மற்றவர்க்கும் மேல்.

* * *

மேலான தைப்பொங்கல் மேதினிக்கண்
நற்றமிழர்
காலாக லத்தெழுந்தே காண்பொங்கல்
– ஞாலத்தே
வீரத்தைக் காட்டி வியன்காதல் தாமூட்டிச்
சீரொத்து வாழ்ந்தோர் தினம்.

* * *

தினமும் மனைமாட்சி சேரும் – நினைவை]
மனதின்கண் ஆக்கல் மதிப்பாம்
– தனக்கென்றே
தாமக்கும் கொள்கை தலத்திற்கும்
சாருமெனில்
ஏமாற்று வாராதே எண்.

* * *

எண்ணம்] இதமாயின் இல்லறத்தில்
இன்பமயம்
வண்ணம் பிறக்கும் வளஞ்சிறக்கும்
– உண்மை
உறவே உயிர்நாடி ஓதுவதைப் போலும்
நிறைவாய் செயற்கண் நிலைத்து.

* * *

நிலைக்கும் நினைவை நிறைபொங்கல் நாளில்
தலைக்கொள், தவறுது சாற்றே-விலைக்காக
மானத்தை விற்காதே மாண்பார்
- மனிதனெனும்
தானத்தில் நிற்பாய் தலை.

அரியாலையூர் வே.ஐயாத்துரை.


எமது வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்

பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்



சுந்தர்ஸன்

இறக்குமதி செய்யப்பட்ட நவீன மின்சார உபகரணங்கள் உங்களது வீட்டை அலங்கரிக்க,
நவீன மின்சார தூங்கு லாம்புகள் மற்றும் சுவர் லாம்புகள்

மேலும்

மின்சார அடுப்புகள், மின்சார விசிறிகள் அத்துடன் நவீன சுவர்க் கடிகாரங்கள்!
மகாராஜாவின் எஸ்-லோன் பைப்புகள் உபகரணங்கள்! மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்
(வீட்டுத் தேவைக்கேற்றதும், விவசாயிகளுக்கு ஏற்றதும்)

ஆகியவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயவிலையில் பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.

சுந்தர்ஸன்

மத்திய சந்தை — மானிப்பாய்

குறிப்பு :- வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

LINKA ELECTRICALS: உற்பத்தி செய்யும் 4 அடி - 2 அடி ரியூப் லைற் செற்றுகளுக்கும், வட்ட ரியூப் லாம்புகளுக்கும்,
மின்சார அடுப்புகளுக்கும் நாமே ஏகவிநியோகஸ்தர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எமது நல்வாழ்த்துக்கள்
தத்ரூபமான
புகைப்படங்களுக்கு
நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்
கவி போட்டோ
"தம்பு பில்டிங்"
கே. கே. எஸ். வீதி, இணுவில்.
உங்கள் தேவை அறிந்து
சிறப்பான சேவையாற்றுவோம்

# உதயன்

## வருட வழிகாட்டி - 1987

பாதுகாப்பான சூழலில்
நவநாகரிக
தையல் வேலைகளுக்கு
நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்
சஹீட் ரெயிலறிங்
'தம்பு பில்டிங்'
கே. கே. எஸ். வீதி, இணுவில்.

### 1987 அக்ஷய ஹூ பிரபவ ஹூ தமிழ்

| | மார்கழி / தை | தை / மாசி | மாசி / பங்குனி | பங்குனி சித்திரை |
|---|---|---|---|---|
| ஞா | 20 27 5 12 | 19 26 3 10 | 17 24 1 8 15 | 22 29 6 13 |
| தி | 21 28 6 13 | 20 27 4 11 | 18 25 2 9 16 | 23 30 7 14 |
| செ | 22 29 7 14 | 21 28 5 12 | 19 26 3 10 17 | 24 1 8 15 |
| புத | 23 1 8 15 | 22 29 6 13 | 20 27 4 11 | 18 25 2 9 16 |
| வி | 17 24 2 9 16 | 23 30 7 14 | 21 28 5 12 | 19 26 3 10 17 |
| வெ | 18 25 3 10 17 | 24 1 8 15 | 22 29 6 13 | 20 27 4 11 |
| சனி | 19 26 4 11 18 | 25 2 9 16 | 23 30 7 14 | 21 28 5 12 |

| | சித்திரை / வைகாசி | வைகாசி / ஆனி | ஆனி / ஆடி | ஆடி / ஆவணி |
|---|---|---|---|---|
| ஞா | 17 20 27 3 10 | 24 31 7 14 | 21 28 3 10 | 14 17 24 31 7 |
| தி | 21 28 4 11 | 18 25 1 8 15 | 22 29 4 11 | 15 18 25 1 8 |
| செ | 22 29 5 12 | 19 26 2 9 16 | 23 30 5 12 | 19 26 2 9 |
| புத | 23 30 6 13 | 20 27 3 10 | 17 24 31 6 13 | 20 27 3 10 |
| வி | 24 31 7 14 | 21 28 4 11 | 18 25 32 7 14 | 21 28 4 11 |
| வெ | 18 25 1 8 15 | 22 29 5 12 | 19 26 1 8 15 | 22 29 5 12 |
| சனி | 19 26 2 9 16 | 23 30 6 13 | 20 27 2 9 | 16 23 30 6 13 |

| | ஆவணி / புரட்டாதி | புரட்டாதி ஐப்பசி | ஐப்பசி / கார்த். | கார்த். / மார்கழி |
|---|---|---|---|---|
| ஞா | 21 28 4 11 | 18 25 1 8 | 15 22 29 6 13 | 20 27 5 12 |
| தி | 22 29 5 12 | 19 26 2 9 | 16 23 30 7 14 | 21 28 6 13 |
| செ | 16 23 30 6 13 | 20 27 3 10 | 17 24 1 8 | 15 22 29 7 14 |
| புத | 17 24 31 7 14 | 21 28 4 11 | 18 25 2 9 | 16 23 1 8 15 |
| வி | 18 25 1 8 | 15 22 29 5 12 | 19 26 3 10 | 17 24 2 9 16 |
| வெ | 19 26 2 9 | 16 23 30 6 13 | 20 27 4 11 | 18 25 3 10 |
| சனி | 20 27 3 10 | 17 24 31 7 14 | 21 28 5 12 | 19 26 4 11 |

### ஹிஜ்ரி 1407—1408

| | ஜமாதி அவ் | ஜமா ஆகிர் | றஜப் | ஷஃபா |
|---|---|---|---|---|
| ஞா | 3 10 17 24 | 30 2 9 16 23 | 7 14 21 28 | 5 12 19 26 |
| தி | 4 11 18 25 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| செ | 5 12 19 26 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 7 14 21 28 |
| புத | 6 13 20 27 | 5 12 19 26 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| வி | 7 14 21 28 | 6 13 20 27 | 4 11 18 25 | 2 9 16 23 |
| வெ | 1 8 15 22 29 | 7 14 21 28 | 5 12 19 26 | 3 10 17 24 |
| சனி | 2 9 16 23 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 4 11 18 25 |

| | றம்ழான் | ஷவ்வா | ஜூல்ஹஃ | ஜூல்ஹஜ் |
|---|---|---|---|---|
| ஞா | 4 11 18 25 | 2 9 16 23 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| தி | 5 12 19 26 | 3 10 17 24 | 2 9 16 23 30 | 7 14 21 28 |
| செ | 6 13 20 27 | 4 11 18 25 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| புத | 7 14 21 28 | 5 12 19 26 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| வி | 1 8 15 22 29 | 6 13 20 27 | 5 12 19 26 | 3 10 17 24 |
| வெ | 2 9 16 23 30 | 7 14 21 28 | 6 13 20 27 | 4 11 18 25 |
| சனி | 3 10 17 24 | 1 8 15 22 29 | 7 14 21 28 | 5 12 19 26 |

| | முஹறம் | ஸபர் | ரபியு அவ் | ரபியு ஆகிர் |
|---|---|---|---|---|
| ஞா | 4 11 18 25 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 7 14 21 28 |
| தி | 5 12 19 26 | 4 11 18 25 | 2 9 16 23 | 1 8 15 22 29 |
| செ | 6 13 20 27 | 5 12 19 26 | 3 10 17 24 | 2 9 16 23 30 |
| புத | 7 14 21 28 | 6 13 20 27 | 4 11 18 25 | 3 10 17 24 |
| வி | 1 8 15 22 29 | 7 14 21 28 | 5 12 19 26 | 4 11 18 25 |
| வெ | 2 9 16 23 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 5 12 19 26 |
| சனி | 3 10 17 24 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 6 13 20 27 |

### இந்துக்களின் விசேஷ தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் |
| ஜனவரி | 15 | பட்டிப்பொங்கல் |
| பெப்ரவரி | 12 | தைப்பூசம் |
| பெப்ரவரி | 26 | மஹா சிவராத்திரி |
| மார்ச் | 13 | மாசிமகம் |
| ஏப்ரல் | 12 | பங்குனி உத்தரம் |
| ஏப்ரல் | 14 | பிரபவ வருஷப் பிறப்பு |
| மே | 13 | சித்திரா பூரணை விரதம் |
| ஜூன் | 9 | வைகாசி விசாகம் |
| ஜூலை | 3 | ஆனி உத்தரம் |
| ஜூலை | 25 | ஆடி அமாவாசை விரதம் |
| ஜூலை | 29 | ஆடிப்பூரம் |
| ஆகஸ்ட் | 7 | வரலட்சுமி விரதம் |
| ஆகஸ்ட் | 28 | விநாயகஷஷ்டி விரதம் |
| செப்டம். | 2 | ஆவணி மூலம் |
| செப்டம். | 23 | நவராத்திரி |
| அக்டோ. | 1 | சரஸ்வதிபூஜை |
| அக்டோ. | 2 | விஜயதசமி |
| அக்டோ. | 21 | தீபாவளித் திருநாள் |
| அக்டோ. | 22 | கேதாரகௌரி விரதம் |
| அக்டோ. | 23 | கந்த ஷஷ்டி |
| நவம்பர் | 26 | ஷஷ்டி விரதம் |
| டிசம்பர் | 4 | திருக்கார்த்திகை – குமாராலய, சர்வாலய தீபம் |
| டிசம்பர் | 5 | விஷ்ணுவாலய தீபம் |
| டிசம்பர் | 25 | விநாயக ஷஷ்டி விரதம் |
| டிசம்பர் | 26 | திருவெம்பாவை |
| டிசம்பர் | 30 | சுவர்க்கவாயிலேகாதசி |

### கிறிஸ்தவ திருநாட்கள்

| | | |
|---|---|---|
| ஜன. | 20 | நாரூட்டான் சூரியகட்டைக்காடு புனித செபஸ்தியார் விழா |
| பெப். | 11 | தும்பளை. போயிட்டி. இளவாலை, மாந்தை, திருக்கேதீஸ்வரம் லூர்த்து மாதா திருநாள் |
| மார்ச் | 13 | அல்வாய் சக்கோட்டை புனித பிரான்ஸிஸ் சவேரியார் திருநாள் |
| மார்ச் | 19 | அர்ச்-சூசையப்பர் திருநாள் |
| ஏப். | 12 | குருத்தோலை ஞாயிறு |
| ஏப். | 17 | பெரிய வெள்ளி |
| ஏப். | 19 | உயிர்த்த ஞாயிறு |
| மே. | 13 | இரணைப்பாலை மு. பாத்திமா அன்னை திருநாள் |
| மே. | 31 | தேவதாய் வணக்க மாத முடிவு |
| ஜூன் | 13 | புனித அந்தோனியார் திருநாள் |
| ஜூன் | 13 | அச்சுவேலி புனித அந்தோனியார் திருநாள் |
| ஜூன் | 22 | திரு இருதய திருநாள் |
| ஜூன் | 29 | புனித இராயப்பர் சின்னப்பர் விழா |
| ஜூலை | 2 | மருதமடு அன்னை விழா |
| ஜூலை | 16 | வவுனியா இன மருதங்குளம் உத்தரிய மாதா திருநாள் |
| ஜூலை | 26 | புனித யுவக்கின அன்னம்மாள் |
| ஆக. | 15 | தேவதாய் விண்ணேற்பு விழா |
| ஆக. | 22 | மரியன்னையின் திரு இருதயம் |
| ஆக | 30 | சேந்தான்குளம் புனித அந்தோனியார் திருநாள் |
| செப். | 8 | தேவதாய் பிறப்பு |
| செப். | 27 | துன்னாலை வடக்கு சதா சகாயமாதா திருநாள் |
| அக் | 6 | சில்லாலை கதிரைமாதா கொடியேற்றம் |
| அக். | 7 | செபமாலை அன்னை |
| அக். | 21 | ஒடுக்கத்துப் புதன் |
| நவ. | 1 | புனித அனைவர் விழா |
| நவ. | 2 | இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு தினம் |
| டிச. | 3 | புனித பிரான்ஸிஸ் சவேரியார் |
| டிச. | 8 | கன்னிமரியின் அமல உற்சவம் |
| டிச. | 21 | எழுவைதீவு புனித தோமையார் திருநாள் |
| டிச | 25 | கிறிஸ்மஸ்-நத்தார் திருநாள் |

### பாடசாலைத் தவணை - தமிழ்

1ம் தவணை:- 05 – 01 – 1987 முதல் 03 – 04 – 1987 வரை
2ம் தவணை:- 04 – 05 – 1987 முதல் 24 – 07 – 1987 வரை
3ம் தவணை:- 25 – 08 – 1987 முதல் 03 – 12 – 1987 வரை

### 1987 ஆங்கில வருடம்

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் |
|---|---|---|---|---|
| ஞா | 4 11 18 25 | 1 8 15 22 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| தி | 5 12 19 26 | 2 9 16 23 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| செ | 6 13 20 27 | 3 10 17 24 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| புத | 7 14 21 28 | 4 11 18 25 | 4 11 18 25 | 1 8 15 22 29 |
| வி | 1 8 15 22 29 | 5 12 19 26 | 5 12 19 26 | 2 9 16 23 30 |
| வெ | 2 9 16 23 30 | 6 13 20 27 | 6 13 20 27 | 3 10 17 24 |
| சனி | 3 10 17 24 31 | 7 14 21 28 | 7 14 21 28 | 4 11 18 25 |

| | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் |
|---|---|---|---|---|
| ஞா | 31 3 10 17 24 | 7 14 21 28 | 5 12 19 26 | 30 2 9 16 23 |
| தி | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 | 31 3 10 17 24 |
| செ | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 |
| புத | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 |
| வி | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 |
| வெ | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 |
| சனி | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 |

| | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|
| ஞா | 6 13 20 27 | 4 11 18 25 | 1 8 15 22 29 | 6 13 20 27 |
| தி | 7 14 21 28 | 5 12 19 26 | 2 9 16 23 30 | 7 14 21 28 |
| செ | 1 8 15 22 29 | 6 13 20 27 | 3 10 17 24 | 1 8 15 22 29 |
| புத | 2 9 16 23 30 | 7 14 21 28 | 4 11 18 25 | 2 9 16 23 30 |
| வி | 3 10 17 24 | 1 8 15 22 29 | 5 12 19 26 | 3 10 17 24 31 |
| வெ | 4 11 18 25 | 2 9 16 23 30 | 6 13 20 27 | 4 11 18 25 |
| சனி | 5 12 19 26 | 3 10 17 24 31 | 7 14 21 28 | 5 12 19 26 |

### அரசாங்க, வங்கி, வர்த்தக, பூரணை விடுமுறை நாட்கள் -- 1987

| | | |
|---|---|---|
| ஜன. | 14 | தமிழ் தைப்பொங்கல் தினம் *!‡ |
| ஜன | 14 | பௌர்ணமி தினம் *!‡ |
| பெப். | 04 | சுதந்திர ஞாபகார்த்த தினம் *!‡ |
| பெப். | 13 | பௌர்ணமி தினம் *!‡ |
| பெப். | 26 | மஹா சிவராத்திரி தினம் *! |
| மார்ச் | 15 | பௌர்ணமி தினம் *!‡ |
| ஏப் | 13 | பௌர்ணமி தினம் *!‡ |
| ஏப். | 13 | தமிழ், சிங்கள புத்தாண்டு முந்திய தினம் *!‡ |
| ஏப் | 14 | தமிழ், – சிங்கள புத்தாண்டு தினம் *!‡ |
| ஏப். | 17 | பெரிய வெள்ளி *! |
| மே | 01 | மே தினம் *!‡ |
| மே | 13 | வெசாக் பௌர்ணமி முந்திய தினம் *!‡ |
| மே | 14 | வெசாக் பௌர்ணமி தினம் *!‡ |
| மே | 22 | தேசிய வீரர் தினம் *!‡ |
| மே | 30 | ஈதுல் பிதுர் – றம்ழான் தினம் *! |
| ஜூன் | 11 | பௌர்ணமி தினம் *!‡ |
| ஜூன் | 30 | விசேஷ வங்கி விடுமுறை ! |
| ஜூலை | 10 | பௌர்ணமி தினம் *!‡ |
| ஆக. | 06 | ஈதுல் அல்ஹா – ஹஜ்ஜுப் பெருநாள் *! |
| ஆக. | 08 | பௌர்ணமி தினம் *!‡ |
| செப் | 07 | பௌர்ணமி தினம் *!‡ |
| அக். | 06 | பௌர்ணமி தினம் *!‡ |
| அக். | 21 | தமிழர் தீபாவளித் திருநாள் *! |
| நவ. | 05 | நபிகள் பிறந்த தினம் *!‡ |
| நவ. | 05 | பௌர்ணமி தினம் *!‡ |
| டிச. | 04 | பௌர்ணமி தினம் *!‡ |
| டிச | 25 | நத்தார் பண்டிகை *!‡ |
| டிச. | 31 | விசேஷ வங்கி விடுமுறை ! |

* அரசாங்க, ! வங்கி, ‡ வர்த்தக விடுமுறை நாட்கள்

### குருபூசைத் தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 20 | சண்டேசுவரநாயனார் |
| ஜனவரி | 24 | தாயுமான சுவாமிகள் |
| ஜனவரி | 31 | அப்பூதியடிகள் |
| பெப்ரவரி | 9 | கண்ணப்பநாயனார் |
| பெப்ரவரி | 16 | திருவள்ளுவர் |
| மார்ச் | 8 | கச்சியப்பர் |
| மார்ச் | 18 | காரைக் காலம்மையார் |
| ஏப்ரல் | 9 | யோகசுவாமிகள் |
| ,, | 23 | திருநாவுக்கரசு நாயனார் |
| ,, | 28 | சிறுத்தொண்டர் |
| மே | 10 | உமாபதி சிவாசாரியார் |
| ஜூன் | 1 | சேக்கிழார் |
| ,, | 12 | திருஞானசம்பந்தர் |
| ஜூலை | 1 | மாணிக்கவாசகர் |
| ஆகஸ்ட் | 2 | சுந்தரமூர்த்திநாயனார் |
| ,, | 8 | பட்டினத்தார் |
| ,, | 26 | மறைஞானசம்பந்தர் |
| செப்டம்பர் | 2 | குங்கிலியக்கலயர் |
| அக்டோபர் | 11 | திருநாளைப்போவார் |
| ,, | 23 | மெய்கண்டதேவர் |
| நவம்பர் | 4 | திருமூலர் |
| ,, | 26 | இராமநாதர் |
| டிசம்பர் | 11 | ஆறுமுகநாவலர் |

### பிறந்த திகதி எண்ணுக்குரிய அதிஷ்ட தினம் நிறம்

| எண் | இரத்தினம் | அதிஷ்ட நிறம் | அதிஷ்ட தேதிகள் |
|---|---|---|---|
| 1 | மாணிக்கம் | பொன் | 1, 10, 19, 28 |
| 2 | முத்து | வெண்பச்சை | 7, 16, 25 |
| 3 | புஷ்பராகம் | ஆரஞ்சு, றோஸ் | 3, 9 12, 18, 21, 27, 30 |
| 4 | கோமேதகம் | மஞ்சள் | 1, 10, 19 |
| 5 | வைரம் | சாம்பர் | 5, 9, 14, 18, 23, 27 |
| 6 | மரகதம் | ஆழ்ந்த பச்சை | 6, 15, 24 |
| 7 | வைடூரியம் | இலேசான எல்லாம் | 2, 11, 20, 29 |
| 8 | நீலம் | நீலம் | 1, 10, 19, 28 |
| 9 | பவளம் | சிவப்பு | 5,6,9,14,15,18,21,24,30 |

எண்கள்

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 3 | 5 | 1 | 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 6 | 6 | 5 | 1 | 7 |

### பிரபவ வருஷ பலன்

இந்த வருஷம் நல்ல மழை: நெல், சோளம், கரும்பு மற்றும் சிறுதானியங்கள் நல்விளைச்சல், பொன். இரும்பு, வெள்ளி, ஈயம் முதலானவை விலையேற்றம். கால் நடைகள் கஷ்டம். அந்நியச் செலாவணி குறைதல் போர்ப்பயம் உருவாகும். அக்கினி, ஆயுதம் முதலியவற்றால் அழிவு வெளிநாட்டு உறவுகள் சீர் குலைதல்.

இலங்கையின் நாணய மாற்றில் மாற்றம். பட்டு, கம்பளி விலையேற்றம் பருத்தி விலை குறைவு புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் காற்றுக் குழப்பம் ஏற்படலாம். கூலிக்காரர், வேலையாட்கள் வாழ்க்கைத்தரம் உயரும்.

இலங்கை அரசியலில் பெரிய மாற்றம். தென் பகுதியில் கலவரங்கள் நிலம், விவசாயம் என்பவற்றில் சிதைவு. மருந்து வகைத் தட்டுப்பாடு. பெண் வர்க்கம். நன்மை படைகள், சுபீட்சம் என்பன உண்டாம்

### வெளிநாட்டுத் தபாற் கட்டணங்கள்
#### விமானத் தபால்

| | முதல் 10கி | மேலதிக 10கி |
|---|---|---|
| அமெரிக்கா | 10.00 | 7.00 |
| கனடா | 10 00 | 7.00 |
| மக்கள் சீனக் குடியரசு | 8.50 | 5.00 |
| டுபாய் | 7.00 | 4.00 |
| ஜப்பான் | 8.30 | 5.50 |
| இந்தியா | 6.30 | 2.50 |
| குவைத் | 7.00 | 4.00 |
| லிபியா | 8.00 | 4.00 |
| ஈரான் | 8 00 | 4.00 |
| மலேசியா | 7 00 | 4.00 |
| சிங்கப்பூர் | 7.00 | 5.00 |
| மாலைதீவு | 6 50 | 2.50 |
| நோர்வே | 8 50 | 5.00 |
| ஓமான் | 7 00 | 4.00 |
| பாகிஸ்தான் | 6 50 | 2.50 |
| சவூதி அரேபியா | 7.00 | 4.00 |
| ஜெர்மனி | 8.50 | 5.00 |
| பிரான்ஸ் | 8 50 | 5.00 |
| பிரித்தானியா | 10.00 | 7.00 |

### இஸ்லாமியத் திருநாட்கள்

| | | |
|---|---|---|
| ஜன. | 19 | ஞானியர் ஸாகிபு பாடல் தினம் |
| ஜன. | 31 | கல்முனை கடற்கரைப்பள்ளி விசேஷம் |
| பெப். | 1 | கெச்சிமலை தர்கா ஷரீப் கந்தூரி |
| பெப். | 11 | நாகூர் ஷாஹுல் ஹமீத் நாயகம் -ரலி-உரூஸ் |
| பெப். | 15 | இமாம் கஸ்ஸாலி -ரஹ்- நினைவு |
| பெப். | 23 | அபூபக்கர் ஸித்தீக்-ரஹ் - நினைவு |
| மார்ச் | 30 | புனித மிஃராஜ் |
| ஏப்ரல் | 1 | இமாம் ஹாபி- ரஹ்-நினைவு தினம் |
| ஏப்ரல் | 3 | பேருவலை புனித கந்தூரி |
| ஏப்ரல் | 16 | புனித பறுஅத் இரவு |
| மே | 2 | புனித ரமழான் நோன்பு ஆரம்பம் |
| மே | 2 | முஹிபித்தீன் ஆண்டகை பிறந்தது |
| மே | 28 | புனித லைலத்துல் கத்ர் இரவு |
| மே | 30 | நோன்புப் பெருநாள் |
| ஜூன் | 13 | இமாம் புகாரி -ரஹ்- நினைவு தினம் |
| ஜூன் | 22 | கல்வத்து நாயகம்-ரஹ்-நினைவு தினம் |
| ஜூலை | 12 | ஜல்வத்து நாயகம்-ரஹ்-நினைவு தினம் |
| ஆகஸ்ட் | 6 | ஹஜ்ஜுப் பெருநாள் |
| ஆகஸ்ட் | 7 | அரபா தினம் |
| ஆகஸ்ட் | 27 | இஸ்லாமிய புது வருடம் |
| செப் | 7 | ஆசூரா தினம் 9–10 நோன்பு |
| அக் | 21 | ஒடுக்கத்துப் புதன் |
| நவம். | 3 | நாயகம் அஷ்ஷெய்கு அஹ்மதிய்னு முபாரன் மௌலானா -ரஹ்- நினைவு |
| நவம். | 5 | நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| நவம். | 10 | சிரு உமறுப்புலவர் புகழ் நாள் |
| டிசம். | 6 | போர்வைக் கந்தூரி |
| டிசம். | 7 | முஹிபித்தீன் ஆண்டவர் கந்தூரி |

### பாடசாலைத் தவணை - முஸ்லிம்

1ம் தவணை:- 05 – 01 – 1987 முதல் 29 – 04 – 1987 வரை
2ம் தவணை:- 08 – 06 – 1987 முதல் 24 – 07 – 1987 வரை
3ம் தவணை:- 20 – 08 – 1987 முதல் 03 – 12 – 1987 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலோ! பொங்கல்!

# உதயன் உழவர் திருநாள் சிறப்பிதழ்

எங்கும் மங்களம் தங்குக

# முப்பெருமை வாய்ந்த தமிழர் திருநாள்

ஏ. என். யோகநாதன்

இன்று —
தமிழ் மக்களுக்கு மூன்று முக்கிய விடயங்கள் உள்ள சிறப்பான நாளாகும்.

தைப்பொங்கல் தினம் - தமிழர் திருநாள்.

தமிழ் மக்களுக்கும் உலகத்திற்கும் தெய்வீகத் திருக்குறளை அளித்த அந்த தெய்வத் திருமகன் திருவள்ளுவரின் 2018 ஆண்டு தொடக்கமான புதுவருடம்.

20 ஆம் நூற்றாண்டில் மிகவும் தலை சிறந்த தத்துவ ஞானிகளில் ஒருவராகக் கணிக்கப்படும் டாக்டர் ஆல்பேற் சுவைட்சரின் 112 ஆவது பிறந்த தினம்.

திருவள்ளுவரின் திருக்குறளில் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவம் இருப்பதை டாக்டர் ஆல்பேற் சுவைட்சர் உலகத்திற்கு எடுத்துக் காட்டினார். இதன் பயனாக அகிலமெங்கும் திருக்குறளைப் படிப்பதற்கு புதிய ஆர்வமும் ஊக்கமும் ஏற்பட்டது.

ஒவ்வொருவரும் தனக்குத்தானே செய்யவேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்த நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை என்று சொல்லலாம் — என்கிறார் டாக்டர் ஆல்பேற் சுவைட்சர்.

புத்தமதத்திற்கு தம்மபதம் போல, கிறிஸ்தவர்களுக்கு பைபிள், இஸ்லாமியருக்கு திருக்குர்ஆன், சீக்கியருக்கு கிராந்சாகிப், பாரசியருக்கு செண்ட் அவெஸ்டா, யூதர்களுக்கு தோரா நூல்கள் எப்படியோ அப்படியேதான் தமிழ் மக்களுக்கும் திருக்குறள் விளங்குகிறது. ஆனபடியால் தமிழர்கள் இந்நூலை தெய்வீக நூலாக கௌரவிக்கிறார்கள்.

காஇல் கிப்ருன் என்னும் லெபனன் தேசத்து அறிஞன் 'சமயம் மனிதனின் எல்லாச் செய்கைகளும் எல்லா பிரதிபலிப்புகளுமே' என்று விளக்கம் கூறியிருக்கிறார்கள். பிற மதத்தினர் தங்களுடைய கொள்கைகளுக்கும் கருத்துகளுக்கும் மாறுபடாமல் திருக்குறளின் போதனைகளை ஏற்றுக்கொள்ளமுடியும்.

தமிழ் மொழிக்கு அழியாத் தன்மையையும், உலகம் போற்றும்படியும் செய்த மூன்று புனித நூல்களில், முதன்மையாகவுள்ளதும், எல்லோருக்கும், எக்காலத்துக்கும் ஏற்ற நூல் திருக்குறள். மனித வாழ்க்கைக்கு பேரானந்தத்தைக் கொடுக்கும் தேனாக விளங்குகிறது. முழு மனித குலத்தின் பேரார்வத்தைச் சுருக்கமாகக் கூறும் அழியாத தன்மையை உடையது.

பொது நீதிகளைப்பற்றிக் கூறும் திருக்குறளில் பயன் கருதிய பரிசில்களுக்கு வேறு தத்துவ நூல்கள் கொடுக்கும் ஆதிக்கம் அளிக்கப்படவில்லை.

திருக்குறளில் வற்புறுத்தும் முடிவுரைகள், நன்மை நன்மைக்காகவே செய்யவேண்டும். நற்செய நலத்திற்காகவே திறம்படச் செய்ய வேண்டும் என்பதே பல குறள்கள் மூலம் இக்கருத்து வெளிப்படையாகின்றது.

தமிழரின் பாரம்பரிய குறிக்கோள்களுக்கு எடுத்துக் காட்டும் வாழ்க்கை உறுதிப்பாடு செயற்பாடு இன்ப நுகர்ச்சி முதலியன திருக்குறளில் புதைந்து புத்துயிர் ஊட்டுகின்றன. விசேடமாக திருக்குறளிலோ அற்புதமான நீதிநெறிவாழ்க்கையுடன் உயிர்த்தன்மை நிறைந்த உள்ளன்பு நெறியும் (Active Love) இணைக்கப்பட்டுள்ளது.

உலகில் பிரசித்தி பெற்ற ஐரோப்பிய ஞானி மூலம் தமிழினத்தின் சிந்தனைக்கும் எட்டாத பாராட்டு ஒவ்வொரு தமிழனின் கவனத்தில் எடுக்கவேண்டிய மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

இத்தினம் டாக்டர் ஆல்பேற் சுவைட்சரையும் அவரின் ஆழ்ந்த சிந்தனைக் கருத்துக்களையும், செயல்களையும் நினைவு கூருவது எமது உரித்தான நன்றிக்கடனாகும்.

இந்திய சிந்தனையையும் தத்துவத்தையும் ஆராய்ந்த பின்னர்தான் திருக்குறளில் மிளிரும் செயல்பாட்டின் நீதியும் (Ethics of Activity), உயிர்த்தன்மை நிறைந்த பிரத்திபட்ச உள்ளன்பும் தமக்கு வெளிப்பட்டதாகக் கூறினர்.

தமிழரின் சிந்தனைச் சிகரத்துக்குப் புகழ் ஈட்டியவரின் உன்னத மதிப்புரை இதுவே. ஒவ்வொரு தமிழனும் திருக்குறளை தனது முதல் நூலாக முக்கியத்துவம் கொடுத்து அதன் போதனைகளின்படி வாழமுயற்சி எடுத்து திருவள்ளுவரின் சிந்தனைகளை மற்றவர்களுக்கு அறியவைத்து, திருக்குறள் கூறும் அறநெறியின்படி வாழ்ந்து பொருள் சம்பாதித்து இன்பத்தையடைந்து, சாதனைகள் புரிந்து, சகோதரத்துவத்துடனும் சமாதானத்துடனும் வாழவேண்டும்.

நான்கு கலாநிதிப்பட்டங்களைப் பெற்ற ஆல்பேற் சுவைட்சருக்குக் கிடைத்த உலக சமாதான நோபல் பரிசின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்வுலகசமாதானத்தை நோக்கி முன்னேறிச் செல்வோம். ●


எமது அன்பார்ந்த ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

எம்மிடம் சகலவிதமான
ஆங்கில மருந்து வகைகளும், பால்மா உணவுவகைகளும், பரிசுப் பொருள்களும், பாடசாலை உபகரணப் பொருள்களும் ஒருங்கே கிடைக்கப்பெறும்.

துவாரகா
பென்ஷி கவுஸ்
பார்மசி அன்ட் குரோசறிஸ்,
இல.107, கண்டி வீதி.
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.


## பொங் 'கொல்' என்று சிரியுங்கள் * * *

மனைவி:- என்ன சாணி தெளித்து கோலம் போட்டிட்டு, ஷெல் துண்டுகளை பரப்பி வைத்திருக்கிறியள்?

கணவன்:- அது ஷெல் துண்டுகளில்லை; பொங்கல் பானையை எரிபொருள் தட்டுப்பாட்டுக்கை மினிபஸ்சில கொண்டு வந்தன், பானையின் ''சில்லுகள்'' தான் அவை.

## வாழ்க்கை எனும்...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)
இவ்வலையில் பிடிபடுவதில்லை. பிடிபட்டவர்கள் சிலர் வலையில் இருந்து தப்பிவிடுவார்கள். இவர்கள் ஜீவன் முக்தர்கள் ஒரு சிலர் தப்புவதற்கு வலைக்குள் இருந்து பிரயத்தனம் செய்பவர்கள். சிலர் தங்களுக்கு ஓர் ஆபத்தும் இல்லையென்று வலைக்குள் எவ்வித முயற்சியும் செய்யாது இருப்பவர்கள். இப்படியாக இருப்பவர்கள் தான் அதிகம் பேர்கள்.

நாம் இங்கு வாழ்ந்து கொண்டிருப்பதும் கனவு இரவில் காண்பதும் கனவு என்ற தத்துவத்தைப்பல கதைகள் மூலம் ஸ்ரீ இராமகிருஷ்ணர் விளக்குகிறார்.

ஒரு குடியானவன் வயலில் வேலை செய்கின்றான். மதிய போசனம் அருந்திவிட்டு சற்று இளைப்பாறுகிறான். அப்பொழுது அவன் ஒரு கனவு காண்கிறான். அக்கனவில், தான் ஓர் அரசனாகவும் தனக்கு 7 பிள்ளைகள் ஒன்றன்பின் ஒன்றாக பிறப்பதாகவும் காண்கிறான்.

கனவு கலைகிறது.

மீண்டும் வயலில் வேலை செய்கிறான். வீட்டுக்குப் போனதும் அவனது ஒரே ஒரு குழந்தை இறந்துவிடுகிறது. அதைப் புதைப்பதற்கு மறுநாள் எடுத்துச் செல்கிறான். அவன் தன் குழந்தை இறந்ததற்காக அழவில்லை.

இதைக்கண்டு இவனது மனைவி இவனைத் திட்டினாள். அவன் மனைவியைப் பார்த்து ''வயலில் கனவில் பெற்ற பிள்ளைகள், கனவு கலைந்ததும், மறைந்துவிட்டார்கள். அதே போலத்தான் எனக்குக் குழந்தை இறந்தது கண்டு இதுவும் கனவு என்ற நிலையை உணர்ந்தேன். எல்லாம் கனவுதான், இதில் வேடிக்கை ஒன்றும் இல்லை என்றான்.

கனவுதான் உலக வாழ்வு. இதை மறந்து பலர் போட்டி, பொறாமை, அதிகாரம் இவற்றில் சிக்கிச் சீரழிவது தவறு. *

## புத்தரிசிப் பொங்க...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)
பாவை நோன்பு பரம்பொருளின் ஆருத்ராதரிசனம் போன்ற சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டு பெருமையுறுகின்றது.

மார்கழிமாத இறுதித் தினம் போகிப்பண்டிகைத்தினம் இத்தினத்தின் மறுதினமே தை மாதம் பிறக்கின்றது. தைப் பொங்கல் தினம் போகிப் பண்டிகை என்பது மனம் சூழல்களின் மாசுகளை அகற்றிப் புனிதம் பெறுவதைக் குறிப்பது. இறை நலம் மனிதப் பண்பியல் நலம்கள் உயிர்களின் இன்ப நலம் உலகவாழ்வின் செழுமை நலம் செய் நன்றிமறவாப் பண்புகள் போன்ற நல் இயல்புகள் தமிழர் வாழ்வில் கலந்து மிளிர்வதைக் காட்டிநிற்பது தைப் பொங்கல் என்று கூறுவது சாலப்பொருந்தும்.

உலகின் இயக்கத்துக்கும் உயிரினத்தின் வாழ்வுக்கும் ஒளியும் வெப்பமும், தட்பமும் தந்து உணவும் நீரும் பெருக உறுதுணைபுரியும் சூரிய பகவானுக்குரிய விசேட வழிபாட்டுத் தினமான தைப்பொங்கல் உழவர் பெருமக்களின்திருநாளாகவும் போற்றப்படும்.

தைப் பொங்கலுக்கு மறு தினம் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக உதவும் மாடுகளுக்கு நன்றி உணர்வோடு பொங்கலிடப்படுகிறது. பட்டிப் பொங்கல் என இது அழைக்கப்படுகிறது. தைப் பொங்கல் அன்று அதிகாலையில் வீட்டு முற்றத்தைப பசுவின் சாணத்தால் மெழுகி சூரியோதயத்தின் முன் நீராடி, மெழுகிய இடத்தில் கோலமிட்டு நிறைகுடம் வைத்து விநாயகருக்கு வழிபாடு செய்து புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கலிடுவ திலும் ஆழ்ந்த தத்துவம் அடங்கி இருக்கிறது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். அந்த வலிமை, நம்பிக்கை, எதிர்பார்ப்பு, உத்வேகம் அனைத்துமே தை மகளுடன் ஒன்று சேர்ந்து வருகின்றன. புத்தரிசிப் பொங்கலை நாம் கதிரவனுக்குப் படைத்து நன்றி செலுத்துகிறோம். உலகுக்கு ஒளியைத் தருவதுடன் தாவர மனிதவர்க்க இயக்கத்துக்கும் அவனே காரணமாகிறான். கோடானுகோடி உயிர்கள் அவனது கருணையால் சீவிக்கும் பலன் நினைவு கூரப்படுகின்றது.


அன்பர்கள், வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எங்கள் பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

A Great Way To Multiply Your Money

SHABRA
RELIABLE GUIDE FOR A BETTER LIFE
YOUR FRIENDS IN FINANCE

SHABRA®

அதி உயர் வட்டி வழங்கும்
நாணயமும் பாதுகாப்பும் நிறைந்த நண்பன்
"ஷப்ரு" யுனிக்கோ நிதி நிறுவனம்

★ எப்பொழுதும் நிதித்துறையில் உங்கள் நண்பன் "ஷப்ரு"வே ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

- தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
- கம்பியூட்டர் முறையில்
- குறைந்த செலவில்
- சிறந்த சேவையில்
  பெற்றுக்கொள்ளலாம்.


# உதயன்

14 · 01 · 1987 புதன்கிழமை


- வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ. 5/- மட்டுமே!
- ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
- வர்ண புகைபடச் சுருள்கள் விற்பனைக்கு

KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628


★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

## சேவை

றேனியோ - ரைப்பிங் தெளிவான போட்டோஸ்ராட் பிரதிகள், றேனியோ பிரதிகள், தமிழ்-ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கு யாழ் நகரில் முதன்மை பெறும் நிறுவனம்;
'இளீன்கட்' இல: 239- மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 22823

## வகுப்புகள்

ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக், மணிக்கூடு திப்பியறில் செய்முறையுடன் கற்பிக்கப்படும். ஆரம்பம் 17-1-1987 விபரங்கட்கு எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்ரிரியூசன் கல்வளை, சண்டிலிப்பாய்.

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் நூலகத்திற்கு அனுபவமுள்ள நூலகர் உடன் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: விளம்பர எண். 48, மே / பா. உதயன், யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஓவியர் தேவை. ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விளம்பர எண். 47, மே / பா. உதயன், யாழ்ப்பாணம்.

### மருத்துவமனை திறப்புவிழா

இன்று புதன் பிற்பகல் மூன்று மணியளவில் ''வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை'' என்ற பெயரில் தனியார் மருத்துவமனை ஒன்று சுண்டிக்குளியில் திறந்து வைக்கப்படும். யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இதனைத் திறந்து வைப்பார்.

## பிறந்த நாள் வேண்டுகோள்

செல்வி காயத்திரி கனகசபாபதியின்
முதலாவது பிறந்தநாள்
வேண்டுகோள்



நாட்டிற் கோர் நல் மகளாய்
  வீட்டில் ஒரு குல விளக்காய்
அன்புடன் பண்பையும்
  பணிவுடன் துணிவையும்
கலையுடன் கல்வியும்
  பெண்மையில் பெருமையும் பெற்றிடவே
அருள் தரும் தெய்வங்களே
  அறிவு தரும் ஆசான்களே
எனை ஈன்ற தாய் தந்தையரே
  பண்பில் உயர் பெரியோரே
பாசமிகு பிறவிகளே
  நேசம் கொள் உறவினரே
ஆசை கொண்ட அயலோரே
  அன்புசால் நண்பர்களே
அனைவரையும் வேண்டுகின்றேன்
  அளித்திடுவீர் நல்லாசிதனை

வல்வெட்டித்துறை
14-01-87

இவ்வண்ணம்
க. காயத்திரி


எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**International Communication Complex**
**MANIPAY**

மானிப்பாயில் பாதுகாப்பான சூழலில்
சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம்

உலகின் எந்தப் பாகத்துடனும்
நொடிப் பொழுதில் தொடர்பு கொள்ளலாம்.

- ★ உள்நாட்டு - வெளிநாட்டு தொலைத் தொடர்பு
- ★ ரெலக்ஸ் வசதி
- ★ இரவு - பகல் எந்நேரமும் சேவை
- ★ தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே நிறுவனம்
- ★ வெளியூர் வெளிநாடுகளிலிருந்து உங்களுக்கு வரும் ரெலக்ஸ் தொலைபேசி செய்திகள் உங்கள் வீடுகளில் விநியோகிக்கப்படும்.

**இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்**
282 யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.

- ★ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான சேவை
- ★ வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் போது இலங்கை நாணயத்தை வீணாக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
  இதற்கான ஒழுங்குகளை நேரில் செய்து கொள்ளலாம்.
- ★ உங்கள் சேவையே எமது நிறைவு.


### இந்திய கவலைக்கு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
தொடர்பு கொள்ளவும் எவரை வரவழைக்கவும் இலங்கைக்கு பூரண உரிமை உண்டு. அதை எவரும் கேட்க முடியாது.
இந்தியா அமெரிக்காவிடம் கவலை தெரிவித்திருப்பதை இலங்கை வன்மையாகக் கண்டிக்கிறது.
இந்தியா தனது கூற்றை வாபஸ் செய்து கொள்ளவேண்டும். (அ-எ)

### லொறி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கொட்டடியைச் சேர்ந்த தர்மலிங்கம் கணேசலிங்கம். (45 வயது).
இவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

## பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் சஜீத்

புங்குடுதீவைச் சேர்ந்த சசிகரன் தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஜீத் தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார், இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்தி, மாமாமார், மாமி ஆகியோர் நாகதம்பிரான் அருள் பெற்று சகலகலாவல்லவனாக வாழ வாழ்த்துகின்றார்கள்,


சங்கானை மக்களுக்கோர் நற்செய்தி!

பொங்கல் தினமான இன்று
நல் வாழ்த்துக்களுடன் நாம் புதிதாக

**மெடி பிளஸ்**
**MEDI PLUS**

என்னும் ஸ்தாபனத்தை ஈழமக்களின் நல்லாதரவுடன் திறந்து வைக்கிறோம்.

எம்மிடம்:
சகல ஆங்கில மருந்து வகைகள், பால் மா வகைகள், மங்கையர்கள் மனம் கமழும் நூல், ரேந்தை, எலாஸ்ரிக் போன்ற பொருட்களை
மலிவு விலையில் பெற
என்றும் எம்மை நாடுங்கள்

**மெடி பிளஸ்**
நவீனசந்தை — சங்கானை.



வடமாகாண மக்களின் அளப்பரிய ஆதரவுடன்
இயங்கிக் கொண்டிருக்கும் எமது ஸ்தாபனம் ஆகிய

★ யூனிவேர்சல் ரெலக்ஸ் ★
(சர்வதேச நேரடி தொலைத் தொடர்பு சேவை)
தனது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அன்பர்கள்
அனைவருக்கும் இனிய
பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது


உலகின் எப்பாகத்தில் இருக்கும் உங்கள் உறவினர் நண்பர்களுடன் நினைத்த நேரத்தில் நினைத்த மாத்திரத்தில் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ளவோ அன்றில் உங்கள் வீட்டிலுள்ள தொலைபேசியூடாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யவோ
நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

**யூனிவேர்சல் ரெலக்ஸ்**
550, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23100, 23006, 25011
ரெலக்ஸ்: 22132 UNITEL CE
(இரவு பகல் முழு நேர சேவை)

குறிப்பு:- வெளிநாட்டில் உள்ளவர்கள் அங்கிருந்தே தொலைபேசியில் தொடர்புகொள்ளும் வசதி. நிமிடத்திற்கு ரூ 10/- வீதம், மேலதிக விபரத்திற்கு நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்.

குறைந்த கட்டணத்தில் எமது அடுத்த சேவை
உங்களிடம் உள்ள வர்ண பட சுருள்களை
வர்ண புகைப்படங்களாக மாற்றுவதற்கு உடன் நாடுங்கள்
ARO PHOTO 550, Hospital Road, JAFFNA.


## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர் வல்லிபுரம் - சதாசிவம்
(பனை தெல்லிப்பளை)
(இலங்கைக் கடற்படை, திருகோணமலை)

மலர்வு:- 1947-08-23
உதிர்வு:- 1986-01-25

திதி:- 1987-01-14

அன்பின் ஜோதியே! பாசத்தின் பிறப்பிடமே! கருணையின் பெருங்கடலே! எம்மை இமைப்பொழுதில் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட என் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகி விட்டாலும் உங்கள் அன்பு முகம் ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

இங்ஙனம்
அன்பு மனைவி, சகோதரி,
உற்றார் உறவினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது அன்பான
பொங்கல் நல் வாழ்த்துக்கள்

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு
ஓர் இனிமையான செய்தி!
**ரெலிபோன் - ரெலக்ஸ்**
**சேவைகள்**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட, குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

★ மைக்ரோ ★
கொம்யூனிக்கேசன்
ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை
இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்
உங்கள் தேவையே எங்கள் சேவை

**மைக்ரோ கொம்யூனிக்கேசன்**
கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி கொக்குவில்.



உள்ளங்கள் பொங்க — உவகைகள் பொங்க
பொங்கும் எம் நெஞ்சின் பொங்கல் வாழ்த்துக்கள்!



ராஜ் மஹால் < மதுரமான சைவ உணவு வகைக்கு
உள்ளம் கவரும் ரம்மியமான ஜவுளி வகைகளுக்கு > ரவி அன் ராஜ்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 14-01-1987 தொலைபேசி இல 24805 23078.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under. Number QL 60 N 86. Telephone, 24805, 23078.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org